கவிதைத்தொகுப்பு



# அடங்காப் பறவை

த.செல்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காப்பறவை

[கவிதைத் தொகுப்பு]



த. செல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ கவிதை :அடங்காப்பறவை

♦ ஆசிரியர்: த.செல்வா

♦ முதல் பதிப்பு: பங்குனி 2022

♦ பதிப்புரிமை: தவராசா சிந்துஜா

♦ வெளியீடு : வேழன் பதிப்பகம், கனகபுரம், கிளிநொச்சி.

♦ Adankapparavai Poem

♦ Author: T.selva

♦ Language:Tamil

♦ First Edition March 2022

♦ Paper:13.5cm x 21cm

♦ Pages: 128

♦ Published by Velan Publication , Kanakapuram Road, Kilinochchi.

♦ ISBN: 978-624-99069-0-7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

தனது ஏழை நரம்பினாலும் புரட்சி வீணையினாலும்
என்னை அழகிய இசையாக்கி மகிழ்ந்த
எனது பாச தெய்வம் அம்மாவுக்கும்,
தாய் நிலம் காணாமல்
இன அழிப்பில் கரைந்த
தமிழ் உறவுகள் யாவர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

பசுமை

மெட்ரோ

மித்திரன்

கரைஎழில்

செண்பகம்

தினகரன்

ஒளிஅரசி

சக்திவானொலி

நிலந்தொழு கவிதைத் தொகுப்பு

ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை

பேராசிரியர் செ.யோகராசா

பேராசிரியர் ம. இரகுநாதன்

கவிஞர் பொன்காந்தன்

கவிஞர் ஜெகா

கவிஞர் தீபச்செல்வன்

தியாகரன் சர்மினி

விமர்சகர் தமிழி

வேழன் பதிப்பகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | முன்னுரை: உதிரமாகச்சிதறி சீறி எழும் உணர்வு–நூலாசிரியர் | 7–9 |
| 02 | அணிந்துரை: பேராசிரியர் செ.யோகராசா | 10–12 |
| 03 | அன்பென்ற அம்மா | 13 |
| 04 | அம்மா | 14 |
| 05 | அம்மாவின் அணைப்பு | 15 |
| 06 | ஓர் ஏழைத்தாயின் சிரிப்பு | 16–17 |
| 07 | இரண்டாந்தாய் | 18–19 |
| 08 | நீ ஒரு புத்தகம் | 20 |
| 09 | இது சாத்தான் யுகம் | 21 |
| 10 | பச்சை ஓணானும் சில எறும்புகளும் | 22 |
| 11 | குர்திஸ் முத்தக்கடிதம் | 23 |
| 12 | இனவிழிப்பு | 24 |
| 13 | இது வக்கிர பூமி | 25 |
| 14 | நான் ஒரு பொறுக்கி | 26–27 |
| 15 | விளக்கில் ஒளிர்ந்திருப்பவன் | 28–29 |
| 16 | புதிர் | 30 |
| 17 | வயல் | 31–32 |
| 18 | காற்றின் கந்தர்வம் | 33 |
| 19 | அடங்காப்பறவை | 34 |
| 20 | கதிரை | 35 |
| 21 | குரல் | 36–37 |
| 22 | புனிதநதியின் கண்கள் | 38–39 |
| 23 | உடையும் இரவுகள் | 40 |
| 24 | வயதின் திரிபு | 41 |
| 25 | படமாகிப் போன அவல வாழ்வு | 42 |
| 26 | தமிழர் பூமி | 43 |
| 27 | இயற்கை | 44 |
| 28 | அழகைக் கண்டேன் | 45 |
| 29 | தீதும் நன்றும் | 46 |
| 30 | நெருப்பை விழுங்கும் சூரியன் | 47 |
| 31 | நிசப்த பூமி | 48–49 |
| 32 | புதுமை ஒரு மீள் நிரப்பி | 50 |
| 33 | விடுதலை மீதான ஆத்ம ஜீவிதம் | 51 |
| 34 | சுதந்திரப் பகட்டு | 52 |
| 35 | காலச்சுழற்சி | 53 |
| 36 | தனி மனித வழிபாட்டை மற | 54 |
| 37 | சொற்கள் | 55 |
| 38 | சிரிய சிசு | 56 |
| 39 | காணாமல் ஆக்கப்பட்ட என் தங்கை எங்கே | 57 |
| 40 | மல்லிகையும் நானும் | 58–59 |
| 41 | நினைவுகள் அழிவதில்லை | 60–61 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 42 | இனிமைக்கனி நீ | 62 |
| 43 | அவள் பெயர் காணாமல் ஆக்கப்பட்டவள் | 63 |
| 44 | அவளொரு யுத்தப்பட்சி | 64-65 |
| 45 | இனி எதுவென்பர் | 66 |
| 46 | பொம்மைகளின் உலகம் | 67 |
| 47 | குறி மீட்டும் நரர் | 68 |
| 48 | அவர்களை விழுங்கும் சூரியன் | 69 |
| 49 | புதிரான புன்னகைத் தீவே | 70 |
| 50 | போய்ச் சொல் பிளாஃட் | 71 |
| 51 | என் வரமானவள் | 72 |
| 52 | அவள் ஒரு கவன இசை | 73-74 |
| 53 | பிடிக்காததைக் கண்டுபிடி | 75-76 |
| 54 | இக்கணத்தை வாழ் | 77-78 |
| 55 | வெறுமை அழகானது | 79-80 |
| 56 | நாம் கடலாகக் கரைவோம் | 81-82 |
| 57 | காத்திருப்பு ஒரு தவம் | 83-84 |
| 58 | உனது திறமையில் இறகானேன் | 85 |
| 59 | நீ எந்தன் சக்தி | 86-87 |
| 60 | இக்கணமே அக்கணம் | 88 |
| 61 | நிரப்பியை நினைக்க வைக்கும் மைனாக்கள் | 89-90 |
| 62 | உறக்கமற்ற இரவுகள் | 91-92 |
| 63 | தெரியாததால் இனிக்கிறது வாழ்வு | 93 |
| 64 | சுமையீனும் எழுத்து | 94 |
| 65 | ருத்ரன் என்கிறாய் | 95 |
| 66 | நாம் காலத்தின் பிள்ளைகள் | 96 |
| 67 | நேர முகம் | 97-98 |
| 68 | என்பதை அறியா மழையாள் | 99-100 |
| 69 | விளக்கும் விலங்கும் | 101 |
| 70 | கவனச் சிறகு | 102 |
| 71 | இரசிப்பதால் இரவைக் கடக்கிறேன். | 103 |
| 72 | தெளிவு | 104-105 |
| 73 | தூங்காவிழி வேதம் | 106 |
| 74 | நிர்மல வழி | 107 |
| 75 | மௌனக் கண்ணாடி | 108-109 |
| 76 | ஆழ்மை | 110 |
| | **பின்னிணைப்புக்கள்** | |
| 77 | செல்வா கவிதையும் காலமும் – கவிஞர் பொன்காந்தன் | 111-114 |
| 78 | செல்வாவின் கவிதைகளில் நுட்பம் மற்றும் தற்காப்புக் கோட்பாடுகள் – கவிஞர் ஜெகா | 115-118 |
| 79 | இது சாட்சியின் குரல் – கவிஞர் தீபச்செல்வன் | 119-120 |
| 80 | இது அடங்காப்பறவையின் அழகியல் தருணம் – தி.சர்மினி | 121-124 |
| 81 | கலைமொழியும் தலைப்புக்களும் – விமர்சகர் தமிழி | 125-128 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## உதிரமாகச்சிதறி சிறி எழும் உணர்வு

அடங்காப்பறவை என்பது அடக்கமுடைமைக்கு எதிரானது அல்ல. அநீதிக்கு எதிரானது. பிரித்தானியர்களை எதிர்த்து எந்த ஒரு பாரதி கவிதையை விடுதலைக்கான கருவியாக்கினானோ அது போல் நானும் கவிதையை கருவியாக்க நினைக்கிறேன். இங்கு நான் என்பது தமிழ் இலக்கணப்படி ஒருமையைக் குறிக்கும் என்று நான் கருதவில்லை. என் போன்ற பலரின் வகை மாதிரியாக இருக்க எத்தனிக்கிறேன். எனது எத்தனிப்பு என்பது கவிதைகளின் தாக்கம் அல்லது சாரம்சமாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன். தொடர்ந்தும் அவலங்களைப் பாடிப்பாடி எழுந்த சலிப்பின் விளைவாக நறுமணம் கமழும் காதல் கவிதைகளையும் எழுதுகிறேன். எல்லாவற்றின் மீதும் கொண்ட காதலே போராட்டத்தை தூண்டிவிடுகின்றது. அது அறமாக இருக்க வேண்டும் என்பது எனது அவா....

தமிழால் விளையாடி வார்த்தை மாயம் செய்வதை கொஞ்சமாக வெறுக்கின்றேன். என்னை ஒரு போர்க்காலக் குழந்தையாக நீங்கள் பார்ப்பதற்கு நான் வருத்தத்தைத் தூவி விடுகின்றேன். எனது கவிதைகளில் போரின் பக்கங்கள் நரம்புகளாக பின்னப்பட்டிருக்கின்றன. போரின் வேர்கள் அறுத்தெறியப்பட வேண்டுமாயின் சமாதானம் என்ற தீபத்தில் உண்மை என்ற எண்ணெயை ஊற்ற வேண்டும் என்பதற்காகவே எனது "அடங்காப்பறவை" பறக்கத் துடிக்கின்றது. தயவு செய்து யாரும் சிறகுகளை உடைத்து விடாதீர்கள் ஏனெனில் அடங்காப்பறவை இன்னும் பறக்க வேண்டும். அதன் வானம் விரிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த, வாழ்கின்ற வாழப்போகும் மொழியை வடிப்பவனே நல்ல கவிஞன் என எண்ணுகிறேன். அத்தகைய கவிதைகளை எழுத ஆசைப்படுகிறேன் என்பதை விட எமது வாழ்வியல் நெருக்கடிகள் அவற்றைப் பிரசவிக்கின்றன என்பதே பொருத்தம்.

ஹிட்லர் போன்ற மனிதர்கள் சாத்தானின் நிறத்தை பூசி வக்கிரத்தின் தெருக்களில் நடக்கின்றனர். அதர்மத்தின் ஆடையால் ஒப்பனை கொண்டு தம்மை அழகாக்கித் திரிகின்றனர். இந்த உலாவைக் கண்ட ஒரு மனம் எப்படி எரியாமல் இருக்கும்?

இந்த எரிதல் என்பது அறத்தை நிலைநாட்ட வேண்டும் என்கிற கோபமாக கொழுந்து விட்டு எரிகிறது. கோபமும் உயர் அறமாகும். அநீதியை எதிர்த்து நின்றால் ஒரு பறவையின் சிறகை ஒடித்து பறப்பை நிறுத்தலாம். அதன் மனப்பறப்பை நிறுத்தவோ அறியவோ முடியாது என்பதே வாழ்வின் சூட்சுமம். யாராலும் யாரையும் சிறைப்படுத்தலாம், சினப்படுத்தலாம் மனதை அல்ல.

ஒரு குடிகாரத் தந்தை தாயை வதைக்கும் போது எழுந்து நடக்க முடியாத குழந்தையின் வாயில் வடியும் வீணீர் நாளை எப்படிப் புரட்சி வீணையாய் மாறுகின்றதோ, தனது தங்கையும் தமையனும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருக்கையில் வல்லாதிக்கத்தின் வஞ்சக ஆட்சியின் மீது எப்படி அனல் பழி எழுகின்றதோ, அரச நீதியே நியாயமானது. தெய்வ நீதி பொய்யானது என்று தமது கையறு நிலையில் தெய்வத்தை வேண்டும் அபலைப் பெண்கள், குழந்தைகள், யாருமற்ற மக்கள் எப்படி வஞ்சிக்கப்படுகின்றனரோ இவற்றையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கிறது அடங்காப்பறவை. இவற்றையெல்லாம் மாற்ற விழைகிறது அடங்காப்பறவை.

சாதியாலோ சமயத்தாலோ பணத்தாலோ பதவியாலோ பாலினாலோ அளவுகோலைக் கொண்டு மற்றவர்களை கொன்று தின்னும் குரூரமும் துரோகமும் நிறைந்த புண்களை முகத்திலணிந்த பிணந்தின்னிகளைக் காண எப்படி கோபத்துக்கு இறக்கை முளைக்கிறதோ அதுதான் அடங்காப்பறவை. மனிதனின் அநியாயங்களையும் கவலையின் நிறத்தினையும் கழுவி மனதைச் சாந்தப்படுத்த ஒரு வயற் கரையோரம் தலைவிரி கோலமாகும் மரத்தடியில் வார்த்தைகளில் வண்ணம் கலந்து கவிதைக்கிண்ணம் நான் கொடுக்க அதைப்பருகும் குழந்தைத்தனத்தில் அன்பென்ற சேலை அணிந்து ஆசைப்பாயில் படுத்துறங்கி சுகம் கொட்டும் காதல் கன்னியரைத்தேடும் மனப்பறவையின் உயிர்த்துடிப்பு இராகம் எப்படி இருக்குமோ அப்படிப் பறப்பதற்காய் உயிரானது அடங்காப்பறவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

ஏறத்தாழ கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கவிதை எழுதி வந்தாலும் கவியரங்கம் கண்டு வந்தாலும் தற்போது தான் தனது முதற் தொகுப்பை வெளியிடுகின்ற கவிஞர் செல்வாவின் இந்நூலிற்கு அணிந்துரை எழுதுவது களிபேருவகையை ஏற்படுத்துகின்றது. பேசுபொருள் புதிதாக இல்லாவிடினும் வெளிப்பாட்டு முறை சமகால ஈழத்துக் கவிதைச் செல் நெறிகளுடன் ஒப்பிடும் போது தனித்துவமாகக் காணப்படுகின்றது. இது பற்றி சுருக்கமாக எடுத்துரைப்பது பொருத்தமானதென்று கருதுகிறேன். சமகால கவிதை செல்நெறிகள் என்று பின் நவீனத்துவ பாணி, வெறுமனே நேரடியாகக் கூறுதல், அரைத்த மாவை அரைத்தல், உற்பத்தி செய்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேற்கூறியவற்றை மனங்கொண்டு நோக்கும் போது இத் தொகுப்பிலுள்ள கவிதைகளுள் சில குறியீட்டுப்பாங்கில் வெளிப்படுவதை அவதானிக்கின்றேன். உதாரணமாக அமைகின்றது அடங்காப்பறவை

“அது எப்படி அடங்கும்
அதன் இறக்கைகளை பறித்து விட்டால்
இறந்து விடுமா என்ன
இன்னும் காயவில்லை
குருதியின் ஈரம்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆரம்பிக்கும் அக் கவிதைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாசிப்பு உள்ளது. இது சமகால அரசியல் சூழ்நிலை பற்றியும் பேசக்கூடும். ''மனித மனம்'' பற்றியும் அமைதல் கூடும். மற்றொன்று புதிய பார்வையோடு வெளிப்படுவது. பாரதி அக்கால மனிதர்களை வேடிக்கை மனிதர்களாக பார்த்தவன். மாறாக இக்கவிஞரோ இக்கால மனிதர்களை சாத்தான் யுகத்தவர்களாக காண்கின்றார்.

காதல் கலகமும் புதிதாகத்தான் தெரிகின்றது இக்கவிஞனுக்கு.

"குரலுக்கு சிறகு முளைக்கும்
அதுவும் பறக்கும்
காதல் பறவைகளுக்கு
குரல் பெரும் சிறகு தான்"

''சமகால வாழ்க்கை'', ''காதல்''என்பவற்றிற்கு அடுத்ததாக இக் கவிதைத் தொகுப்பிலுள்ள பெரும்பாலான கவிதைகள் ''தாய்'' பற்றியவை. தாய் பல்வேறு புதிய பார்வைகளில் பார்க்கப்படுகின்றாள். கடவுள் தான் இவ்வுலகிற்கு வர முடியாத நிலையிலே தனக்காக தாயை அனுப்பி வைத்தான் என்பார்கள். ஆதலின் தாயைப் பற்றி அதிக கவிதைகள் தருவதும் அவை எப்படி வெளிப்பட்டாலும் ஈர்ப்பைத் தருவதும் இயல்பானதே. பின்வரும் கவிதை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

"ஒவ்வொரு இரவும் அம்மா வருவாள்
சின்னனில பேயெண்டா அம்மா வருவாள்
உம்மாண்டி என்றால் அம்மா வருவாள்
உண்ணாமலே அம்மா வருவாள்

அவள் எத்தனையோ காதங்களை
நடந்து சென்றிருப்பாள்
விறகு விற்றும் நாவல் பழம் விற்றும்
தன் பிள்ளைக்கு பாணும் பசுப்பாலும்
கொடுத்து வளர்த்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுள்ள கவிதைச் சிறப்புகளிலொன்று அதன் அசாதாரண எளிமைப் பண்பாகும். நவீன கவிதையின் முக்கிய இயல்புகளில் ஒன்றாக பாரதி கருதுவது எளிமைப் பண்பையே. கவிதையை எளிமையாக எழுதுவது என்பது நாம் நினைப்பது போன்று எளிமையான விடயம் அல்ல.

ஈழத்து மண் சார்ந்த இக் கவிஞரின் பார்வை இம் மண்ணுள் மட்டுப்படுத்தப்படவில்லை. அது விரிந்த சர்வதேச பார்வையாகவும் உள்ளது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு பின்வரும் கவிதை

"குர்திஸ் முத்தக்கடிதம்

குர்திஸ் பெண்ணே
ஒப்பற்ற விடுதலைக்குயிலின்
சிறகு முளைத்த பூரிப்பு
உனது உதடுகளில் ஒட்டிய
உரிமைக் கீதம்
இக்கணமும் என்னை வசீகரிக்கின்றது."

இத் தொகுப்பிலுள்ள சிறந்த கவிதைகளுள் தலையாயது மேற்கூறப்பட்ட கவிதையாகும். கவிதைப்பாணியில் மென் மேலும் தனது கவிதைகளை இக் கவிஞன் தர வேண்டும். அவ்வாறே வேறு பல பாணிகளையும் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் சிறுகதை, நாவல் போன்று நவீன கவிதையும் உலகப்பொதுவான வடிவமாகும். எனவே நாமும் இப் பிரதேசத்தில் காலூன்றியவாறு வெளி உலகத்தையும் தரிசிப்பது அவசியமானது.

வாழ்த்துகளுடன்
பேராசிரியர் : செ. யோகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பென்ற அம்மா

எத்தனை இரவினை
விழுங்கியிருப்பாள் என் அம்மா
வலிகளால் நீளும் கால நதியில்
அழகான தன் பிள்ளைக்காக
தினம் ஆராதனைகளை
சுமந்திடுவாள்
ஏழைத்தாயின் எண்ணம் முழுதும்
முழுமதியாய் அழகு தரும்
அவள் அன்பினில் மலரும் பிள்ளை
நாளை அகிலத்தை ஆளும் என்ற
தவிப்பில்
அவள் அவலத்தை ருசிப்பாள்
தன் இறுதி வரை
அந்தக் கனவுடனேயே கரைவாள்
அன்பென்ற நீண்ட பெரு நதியின்
நினைவுகளாய்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

ஒவ்வொரு இரவும் அம்மா வருவாள்
சின்னனில பேயெண்டா அம்மா வருவாள்
உம்மாண்டி என்றால் அம்மா வருவாள்
உண்ணாமலே அம்மா வருவாள்

இப்பவும்
இனியும் அம்மா வருவாள்
அம்மாவின் கோயிலில்
கற்பூரம் தேவையில்லை
காசும் தேவையில்லை
நேர்த்திக் கடனும் இல்லை
அம்மாவே நேர்ந்திடுவாள்

அம்மாவின் ஆலயம்
தவிப்புக்களைத் தீர்க்கிறது
தாயகத் தீயை மூட்டுகிறது
தணலை நெஞ்சில் கொட்டுகிறது.

ஏழ்கடலை கட என்றால் கடக்க
எட்டுத் திசையை தொடு என்றால் தொட
எரியும் கனியை சுவை என்றால் சுவைக்க
நெஞ்சில் நஞ்சைச் சும என்றால் சுமக்க
நினைப்பு பறவையாகிறது
பாசம் மேகமாக, கருணை முளையாகிறது

எண்ண நிலத்தில் வானம் பிறை தேடுவதில்லை
பிறை வானை வரையும்
பிரிவின் வலியில் பிறையாகையால்
புதிய இறகாகி இரையாகிறாள் அம்மா
அர்த்தங்களைக் கொட்டி
ஆறுதல் இறைக்கிறாள் அம்மா
கண்ணீரைப் பூக்களாய்த் தூவுகிறாள் அம்மா
துகித்தலில் ஆராரோ இசைக்கிறாள் அம்மா
இப்போதும் குழந்தையாகி இரவைப் போர்த்துகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவின் அழைப்பு

முத்தங்களைப் புதைத்தாள்
முகவரியை வரைந்தாள்
சித்திரமாகி
சின்னப் புன்னகை அணிந்தாள்
ஏக்கங்களானாள்
எண்ணங்களை விதைத்தாள்
முத்த வயலில் மூழ்கி
முழு வண்ண மலரானாள்
ஆத்ம கூடலுடன் ஆராரோ
ஆனாள்
பல்லவி பிசகாமல்
பாசத்தை தூவினாள்
ஒரு சிலையெனத் தெரிகையில்
சின்னத் திவலையும் சிதறுது
மலர் கொண்ட வாசனை
நார் கூட அறியாதோ
அம்மாவின் மொழிதலை
மறப்பது தர்மமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் ஏழைத்தாயின் சிரிப்பு

அவள் எத்தனையோ காதங்களை
நடந்து சென்றிருப்பாள்!
விறகு விற்றும் நாவல்பழம் விற்றும்
தன் பிள்ளைக்கு
பாணும் பசும் பாலும் கொடுத்து
வளர்த்தாள்!!

ஒரு குடிகாரக் கணவனின் பிடியில்
பிடுங்கப்பட்ட முடியில்!!
உடைக்கப்பட்ட பற்களில்!!
நொருங்கிப் போகவில்லை!!
அவளின்
பிள்ளைப்பாசம்!
தினமும் வயல் வெளிகளில்
பட்டினத்தார் பாடலையும்
சிவபுராணத்தையும் இசைத்தவாறு
அலைவாள்!

ஆளரவமற்ற இடத்திலெல்லாம்
திமிராகத்தான் நடப்பாள்!
மாட்டெரு விற்றும்
மரக்கறி விற்றும்
தன் உடலை பட்டினி போட்டும்
தன் பிள்ளையின் படிப்பிற்காய்
சில்லறைகளை பத்திரப்படுத்துவாள்!

அவள் சேலை முடிச்சுக்குள்
அவளுடனேயே
சில்லறைகளும் உறங்கும்!
ஒரு சூரியனையே ஈன்றவள்
என்ற திமிர்
அவளில் முழுதாக நிரம்பி வழிந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளில்
தன் பிள்ளையின்
ஒளியில் குளிப்பதற்காய்!
பலர் தன்னைத் தேடுவரென
தினமும் முணுமுணுப்பாள்!
முருகன் கோயிலை பெருக்கும்
நாட்களி லெல்லாம்
ஏதோ பழங்கால கவிதையை
இசைத்தவாறு இரையாகிப் போவாள்!
இறைவனிடம்...

வைத்தியர் சிவராமனாய்
இன்று அந்த ஏழைத்தாயின் சூரியன் சிரிக்கிறான்

இப்போ தெல்லாம்
அவள் வீட்டுக் கண்ணாடியை
காதலிப்போரும்
அடிக்கடி தேடி வரும்
கார் வண்டிகளும்
வெள்ளைக் கொக்குகளும்
ஆங்கிலக் காளான்களும்
ஏராளம்!

அந்த ஏழைத் தாயிடம்
எதுவும் மாறவில்லை
தன் பிள்ளைக்காக
தன் சூரியனுக்காக
அவள் சிவபுராணத்தை
இசைப்பதை இதுவரை
நிறுத்தவில்லை
இனி நிறுத்தப் போவதுமில்லை

மெற்றோ நியூஸ்
06.01.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாந் தாய்

அவள் அவளுக்குள்
ஒரு உலகையே வைத்திருக்கிறாள்
அது அபரிமிதமானது.

அவளின் உலகு
அவள் எண்ணங்களால்
நிரம்பி வழிகிறது.

அவள் எண்ணங்களில்
வழியும் கனவுகளில்
நிராசைகள் கரை
ஒதுங்குகின்றன.

அவள் ஆசைகளில்
அழகிய முத்துக்களாய்
பூக்கின்றாள்

ஒரு சுதந்திர பட்சியாக
யாசகம் விதைக்கிறாள்
அவள் ஆசை வானில்
நட்சத்திரங்கள் ரம்மியமானவை.

அவள் கனவுக் குளத்தின்
புன்னகைத் துளிகள்
பவித்திரமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உலகை ஆளும்
ஆண் சூடா முல்லை
அவள் ஆர்ப்பரிக்கும் கடல்
அவளில் நீந்த நிதர்சனமாகும்
ஜீவன்

அவள் வர்ணப்பிரஸ்தம்
அவளில் மாயங்கள் கோடி

அவள் சுகந்தம் ஏழாம் சுவை
அவள் வியர்வை அமுதரசம்
அவள் செயல்
இதயத்தின் துடிப்பு
அவள் குழல் ஆசைகளின் தொட்டில்

அவள் அதரம்
மயக்கத்தின் தடாகம்
அவள் உதரம்
என் சீவனின் கட்டில்

அவள் ஆசைகளின் அரசி
அவள் என் அரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ ஒரு புத்தகம்

என்னை கடந்து போன
நினைவே மீண்டும் வந்து
உறங்குகிறாய் எனது
உறக்கத்தை கலைத்தவாறு

நீ ஒரு புத்தகம்
எல்லா பக்கமும்
உன் முகமே சிரிக்கிறது

முத்தக் கணைகளைத் தொடுக்க
ஒவ்வொரு பக்கமாய்த் தேடுகிறேன்
எல்லாப் பக்கமும் உன் முகம்

களைப்பின் முதிர்வில்
சலித்துப் போகிறேன் ஆனாலும்
இன்றுவரை தேடுகிறேன்
எனக்காக ஒரு வெற்றுப்பக்கம்
வைத்திருப்பாய் என்ற தவிப்பில்

என் முத்தத்தால் உன் முகம்
நனைந்திடக் கூடாதல்லவா
பல்லாயிரம் பக்கங்களில்
நீ சிரிக்க வேண்டுமல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது சாத்தான் யுகம்

ஓட்டுக்காக நட்பைக் கேட்பர் - பின்
வீட்டுக்காக வேஷ்டி கட்டுவர்
கதிரைக்காக காலில் விழுவர் பின்
மேடை முழுவதும் முழங்கித்திரிவர்

சாத்தான்களை சரித்திரமாக்குவர்
பின் நம்மையே அடிமை எந்திரமாக்குவர்
புண்ணான நெஞ்சை
புனிதமாய்க் காட்டுவர் – பின்
பண்பாடு பற்றியே
பம்பரமாகுவார்

ஊருக்கொரு கோஷ்டி வைப்பர்
பின் சட்டங்கள் இயற்றி
முடி மன்னராவர்
மரணத்தைக் கண்டு
மகிழ்ச்சி கொள்வர்
பின் மனிதத்தைத் தின்று
திமிராய் எழுவர்

புலம்பி நிதம்
புன்மை விதைப்பர் – பின்
புல்லனாகி மெல்ல மடிவர்
புல்லனின் நிலம் பாலை ஆனால்
பின் நல்லனின் நிலம் பசுமை காணும்
முழுச் சாத்தான்களின்
சரிதல் நீண்டால்
பிறகு சந்ததி
புதுச் சரிதம் காணும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சை ஓணானும் சில எறும்புகளும்

காலம் கரை புரண்டு ஓட
பச்சை ஓணானும் ஓடுது

பச்சை ஓணானைக் கண்டால்
குத்தி இரத்தம் எடு என
ஆச்சி சொல்லுவா
இது பச்சை ஓணான்களின் காலம்
இரத்தத்தை எடுக்கவும்
கொடுக்கவும் பழகுதல்
ஒண்டும் அபத்த மில்லை
நாம் எறும்புகளாக இருப்பதால்
எம்மைக் கவர்வதும்
எம் தியாகங்களைக் களவாடுவதும்
தந்திரமாச்சு
காலம் இடைவெளிகளை விடுவதில்லை
இடைவெளிகள் எம்மை விடுவதில்லை
விடுவிப்பின் நாட்கள் நீளலாம்
இடைவெளிகளை நிரப்புவது
எறும்புகளின் இறுதி யுத்தம்
பச்சை ஓணான்களுக்கு
இரத்ததாகம் தீர்க்கும் நாட்கள் ஒரு போதும்
ஓயப்போவதில்லை

ஏனெனில்
ஏழை கண்ணீர்
கூரிய வாளென்றான்
பாவல னொருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்திஸ் முத்தக் கடிதம்

குர்திஸ் பெண்ணே!
ஒப்பற்ற விடுதலைக் குயிலின்
சிறகு முளைத்த பூரிப்பு
உனது உதடுகளில் ஒட்டிய
உரிமைக் கீதம்
இக்கணமும் என்னை வசீகரிக்கின்றது

நீயும் நானும்
ஒட்டாக் குழந்தைகள்
முட்டாத் தேசங்கள்

உனது சரீரத்தில் வியர்வை இல்லை
உனது விழிகளில் இன்று துயரமில்லை
உனது புன்னகையில் முட்களில்லை

ஒரு கடலை உள்ளங்கையில் கிள்ளி விளையாடும்
வித்தைகளுக்கு
எனது முத்தங்களை அனுப்பத் தலைப்பட்டிருக்கிறேன்
ஆயிரம் பாடுகளை உடைத்தெறிந்த அந்தரத்தில்
ஆனந்தமாய்ப் பறக்கும் உனது
உதடுகளுக்கு எனது முத்தங்களை
அனுப்ப தலைப்பட்டிருக்கிறேன்

எனது முத்தங்களை பத்திரப்படுத்து
உன்னைப் போல்
ஒரு நாளில் எனது தேசமும் சிரிக்கும்
எனக்கும் சிறகு முளைக்கும்

அந்நாளில் வருவேன்

மீதி முத்தங்களில் முகிழ்க்கும்
சுதந்திர மூச்சை நாம் இருவரும்
பரிமாறிக்கொள்வதற்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன விழிப்பு

சுதந்திர சயனத்தி லிருந்து
சுதந்திரம் பற்றிப் பேசுகிறான்
அரச யந்திரன்

துவண்டு போகா இனத்தை
துளியேனும் அறியா
ஆருடம் பகர்கிறான்
ஒரு கிறுக்கன்

மாபெரும் அவலக்கடலில்
உற்பத்தி ஆகிறது
பல்லாயிரம் பக்றீரியாக்கள்

சிதைந்து போன சிக்கல் பாறை
பிளக்க விளைகிறது காலப்பயிர்
ஓடும் உதிரத்தில் உதிராது வெளிக்கிறது
இலட்சிய வேட்கை
இப்படியே விழிக்கிறது ஒரு அடைக்கப்பட்ட இனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது வக்கிர பூமி

ஆசை வானில் விழும்
பல்லாயிரம் எரிகற்களை
இரசிக்கும் காலம்

அழகிய நிலவுக்கும்
வழியும் ஒளிக்கும்
இங்கில்லை இரசிப்பு

எல்லையில்லா ஆக்கிரமிப்பு
பூதங்கள் நடுவே அறம் அசிங்கப்
பட்டு கிழித்தெறியப்படுகிறது

மனித மரணத்தை உருசி பார்க்கும்
வக்கிரத்தில் ஏறி நடக்கிறது நவீன மனிதம்

அரச பூதத்தின் இருதயம்
இரத்த தாகம் கொள்வதை
சாமானியம் புரிவதில்லை
அநாகரிகத்தின் கரங்களில்
துடிக்கிறது மனித ஆன்மாவின்
பெறுமானம்
அடங்கா ஆசையின் இருப்புக்காய்
அழகு பார்க்கப்படுகிறது
மனித இறப்புக்கள்

தருமம் குருதியாய் சிதறி ஓடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு பொறுக்கி

சொற்கள் விழுந்து கிடந்தன
பொறுக்கினேன்
என்னை பொறுக்கி என்றார்கள் சில
பொறுக்கிகளும் கூட

சொற்களுக்கு நீரூற்றி
விருட்சமாக்கினேன்
என்னைப் பித்தனென்றார்கள்
தம்மை பிரம்மா என்போரும் கூட

சொற்களின்றி வாழமுடியமா
சொற்களைக் கடந்து சாகத்தான்
முடியுமா

சொற்களை தைத்து கவிதை
செய்தால்
அதை உடுத்தி மகிழ்கிறாள் காதலி
எனது கவிதைச் சட்டையின்
வண்ணங்களைத் தடவி அன்பினை
அனுப்புகிறாள் அங்கமெல்லாம்

சொற்களின் தைப்பு அத்துணை
அழகோ

பிரபஞ்சம் படித்து பார்த்துப்
பழகிய சொற்களை கட்டி
வைத்துக் காதல் செய்தேன்
காதலி அணிய
காதலி இப்போ மனைவியாகிறாள்
மனைவி பின் தாயுமாகிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிய சொற்களால் ஒட்டிய
கவிதையை
அணியச் சொன்னேன்

காசு எங்கே கவிதை எதற்கு
சொற்கள் கிழிந்தன
கூடவே மனதும் கிழிந்தது

பிறகும் பொறுக்கினேன்
சொற்களை
அவள் நெஞ்சத் தொட்டிலை
ஆட்டினேன்
அவள் அடங்கியதாயில்லை

நானோ சேமித்த சொற்களைச்
சுமந்தவனாய்
பிணமானேன்
அழுதன ஆயிரம் கவிக்குழந்தைகள்

நான் மீண்டும் பிறந்தேன்
மனைவியைக் காதலியாக்கினேன்
காதலியைக் குழந்தையாக்கினேன்
வாழ்க்கையை வானமாக்கினேன்
சொற்களை
நட்சத்திரங்களாக்கினேன்
நிலவு நெஞ்சில் தொங்கியது

சொற்களுக்கு இத்துணை ஆற்றலா
நான் மீண்டும் பொறுக்கியானேன்
மீண்டும் சிலர்
"காசு எங்கே கவிதை எதற்கு"

01.08.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கில் ஒளிர்ந்திருப்பவன்

நானும் விளக்கு
விளக்குக்கும் எனக்கும்
பல காதல் உண்டு

விளக்கு ஒரு விலக்கு
என்னுள் பலவற்றை விலக்கியதும்
இந்த விளக்கு தான்

விளக்குக்கு எண்ணெய் விடுகையில்
ஒரு குழந்தைக்குப் பாலூட்டும்
ஆண் தாயாகிறேன்

காற்றில் அணையாமல்
விளக்கைப் பொத்துகையில்
இரு மார்புள்ள தாய் குழந்தையை
மார்பிலும் தோளிலும்
அணைப்பது போலாகிறேன்

விளக்கு எரியும் அழகை
பலமுறை இரசித்திருக்கிறேன்
காற்றின் வெஞ்சமரிலும்
விளக்கு என்னை விட்டதில்லை

அண்ணாவுக்கு பயந்து
தங்கச்சியும் நானும் விளக்குடன்
சமரசமாகிப் படித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களை நினைக்கையில்
நினைவுகளுக்கு அழுகை
பெருக்கிறது

இன்று வன்னியெங்கும்
மின்சாரமில்லை
தன்னை முடித்த விளக்குகள் பல
மீண்டும் பிறந்திருப்பதைப்
பார்க்கிறேன்

இப்போது மின்சாரமில்லை
ஒரு கைப்பிடி விளக்கும்
நிலாவும் கலவி கொண்டன
அதையும் காண்கிறேன்

ஆனால் அன்று
எனதருகே விளக்கில்
படித்த தங்கையில்லையே
தாகம் என்னுள் ஏகமாக

நானும் விளக்காய்
அணைகிறேன்
ஏனெனில் விளக்கு
பிறர்க்கு மட்டுமே ஒளி
அது உள்ளுக்குள் அழுதபடியே
இருக்கும்

நானும் தான்!

*17.08.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிர்

அடக்கமும் அமைதியும் இனிய
தென்றல்
விளக்கைத்தான் தேட வேண்டும்
மின்சாரங்களை அல்ல

படபடத்தும் துடிதுடித்தும்
கவர்ச்சியின் மாய விம்பத்தைப்
பூசிய கன்னிமான்கள் பேசுகையில்
தேன் வழியும் சுகந்தம் சிதறும்
அதற்குள் மயங்கல் அபத்தம்
என்ற உணர்வூறும்

தேனை எவளவென அருந்தலாம்
நதி போல் இல்லையே
அவள் நீரென நதியென
வளைகையில்
விழுகிறேன் நிதம் நிதர்சனம்
அதுவென

அங்கமெல்லாம் பொங்கி வரும்
தங்கமேகமே
என் சொற்களௌவ்வொன்றும்
நட்சத்திரங்களாய்ப் பூக்கின்றன
உன் புன்னகை பூசி இசைக்கவென

நீ ஆராய்ச்சிக்குரியவள்
நான் ஆய்வாளனாகிறேன்
ஆய்வு எத்தனை கடினம்
ஆய்வு எத்தனை அழகு
ஆய்வு எத்தனை சுகமென
உன்னால் அறிந்து கொண்டேன்

ஏனெனில்
நீ ஓர் புரியாப் புதிர்
நானோர் ஓயா ஆய்வு

20.08.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல்

மருதக்கிளைகள்
ஒவ்வொன்றையும் முத்தமிட்டன
என் கால்கள்
காற்று வெயிலைக் குளிர்த்தி
எனது உடலெங்கும் போர்வையாகியது

மனமோ
இந்தப் பிரபஞ்ச வெளியெங்கும்
மிதந்தபடி
மேகத்துக்கும் வயலுக்குமான
பந்தத்தை அளந்தது

மேகமும் வயலும்
ஒரு போதும் முட்டியதில்லை
எட்டிப் பார்த்தும்
தொடுவதில்லை
அவையிரண்டும் எல்லையில்லா
தூரத்திலிருக்கின்றன
உன்னையும் என்னையும் போல்

எந்த முகில்களும் நினைத்ததில்லை
தாம் ஒரு நாளில் மழைத்துளிகளாகி
வயலின் புற்களை கொடிகளை
தருக்களை மணப்போமென

எந்தப் புற்களுக்கும் தெரிவதில்லை
தன்னுடல் ஆவியாக வானைப் புணருமென
அது போல் எனக்கும்
தெரிந்திருக்கவில்லை
உனக்கும் தெரிந்திருக்க
வாய்ப்பேயில்லை
நீயும் நானும் யாரோ
நினதும் எனதும் எவ்வழியோ
சங்கக் கவி செம்புலப் பெயல் நீரோ வென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலின் பச்சைப் பக்கங்களில்
அமரலானேன்
காற்றின் கனவில் தந்தியிசைத்தேன்
ஆங்கொரு சர்ப்பம்
என் கற்பனையைத் தூர்த்தியது

வயலில் கிடந்த மனம்
மனிதருள் நுழைந்தது
அங்கே பல மனிதப்பாம்புகள்
விசத்தை அள்ளி வாரின
மனம் குமுறியது

மறுபடியும் வயலில் காற்றில்
புல்லில்
பூக்களில் கொடிகளில் மரங்களில்
தனது இரசனையை மீட்டியது

வயல் சர்ப்பம்
தூக்கத்தை அணைக்க
மனமோ
கர்வத்துடன் சொன்னது

வயற்பாம்பைக் காட்டிலும்
மனிதப்பாம்பின் விசம் ஆபத்தானது
காடுகளை எரிக்கும் மனிதன்
தன் காட்டுக் குணத்தை எரிக்காதது
ஏனென

விடை காணாக் கேள்விகளை
மூளையில் அடைத்தவனாய்
காற்றின் தீராத பக்கங்களின்
கால்களைச் செலுத்தினேன்

ஆங்கொரு பறவையின்
நிர்மலக்காதலை இரசித்தவனாய்

29.08.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றின் கந்தர்வம்

காற்று எத்தனை தடவை தான்
புணரும்
புணர்ச்சிக் கோட்பாட்டை
அந்தத் தொல்காப்பியனுக்கு
காற்றுத்தான் சொல்லியிருக்கும்

நேற்றைப் போலுள்ளது இன்றும்
விரையும் பேருந்தில்
என் ஆடைகளுக்குள் நுழைந்து
என் அனுமதியின்றி என்னைக்
கந்தர்விக்கும் காற்றுக்கு எவ்வளவு
சுதந்திரம்

பயணம் ஒரு அற்புத பயிர்
அழகிய பாடல்கள் அதற்கு உயிர்
பாட்டைக் காதில் ஊற்றுவதும் காற்று.
தேகத்தை வருடி சொர்க்கத்தைக்
காட்டுவதும் காற்று.

நினைவுகளுக்கு நிறமில்லைப் போல்
கனவுகளுக்கு சரீரமில்லைப் போல்
ஆசைகளுக்கு ஆயுளில்லைப் போல்
இந்தக் காற்றுக்கும் எதுவுமில்லை
ஆனால் அது இல்லையேல்
நானுமில்லை நீயுமில்லை அன்பே

காற்றின் பாடல்களைப் போல்
ஓர் நாள் நாமிருவரும் பயணிப்போம்
அக்கணத்தில் காற்றின் கந்தர்வப்
புதினங்களை நாமிருவரும்
புரிந்துணர்வோடு பகிர்ந்து கொள்வோம்

இதை விட வேறு என்ன உண்டு
பெண்ணே
எனது மூச்சைச் சுமந்து
வரும் காற்றை வைத்திரு
நாளை நாமிருவரும் நம்பிக்கை வீணை மீட்டுவோம்

30.08.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காப்பறவை

அது எப்படி அடங்கும்

அதன் இறக்கைககளைப் பறித்து விட்டால்
இறந்து விடுமா என்ன
இன்னும் காயவில்லை
குருதியின் ஈரம்

கரு மேகத்தினை இறகாக்கி
பறக்க விரைகிறது மீண்டும்
அடைக்கப்பட்ட கூட்டில்
கூதல் குளிர்
பிரிக்கப்பட்ட இறகு
சிந்தப்பட்ட குருதி
இல்லாமல் செய்யப்பட்ட இனம்
களவாடப்பட்ட அதன் நிலம்
என முழு அவலத்துள்ளும்
துளிர் விடுகிறது

புதுச்சிறகு
அதனால்
அது இப்போதைக்கு அடங்குவதாய் இல்லை
மீண்டும் எழுகிறது
மின்னலைக் கிழித்து
அடங்காப்பறவையாய்
அது அடைய வேண்டிய தூரம்
நீளமென்பதால்
எதற்காகவும்
யாருக்காகவும்
அது அடங்கப்போவதாய் இல்லை
அதன் இறக்கைகளை
அவர்களிடமிருந்து பறித்தெடுக்கும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரை

ஒவ்வொரு கதிரையும்
அப்படியே இருக்கிறது
நதியும் ஓடிக்கொண்டேயிருக்கிறது
நீ இருந்த கதிரைகளில்
உதிரம் வடிந்து கொண்டிருக்க

நானும் கதிரையை தேடிக்கொண்டிருக்கிறேன்
எனக்கு நினைவிருக்கிறது
உனது கதிரைகள் பேசும்
உன்னைப்போல் சிரிக்கும்
எண்ணிலடங்கா
உனது பார்வை விரிப்புக்களை
நீட்டிக் கொண்டிருக்கும்
நானும் அம்புகளை பத்திரப்படுத்தியவன் தான்
உனது பார்வைக் குவளைகளை
துளையிட நினைத்தவன் தான்
ஆனாலும் அழிக்கப்பட்டேன்

ஆண்டுகள் சாகின்றன
உனது நினைவுகளிடம் தோற்றுப்போய்
நானும் நேசிக்கிறேன்
உனது கதிரைகளை தொலைத்தவனாய்

கதிரைகளுக்கு காலிருக்கு
நமது கனவுகளுக்கு காலில்லை
கதிரைகளுக்கு இறப்பிருக்கு
எனது கனவுகளுக்கு இறப்பில்லை

ஆதலால்
உனது கதிரைகளை தேடிக்கொண்டேயிருக்கிறேன்
நதி மெல்ல புரள்கிறது.

12.07.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரல்

குரலுக்கும் சிறகு முளைக்கும்
அதுவும் பறக்கும்
காதற் பறவைகளுக்கு
குரல் பெரும் சிறகு தான்

ஒரு தடவை கேட்பதற்காய்
அழுகையில் வழிகிறாய்
யாரிடமோ எல்லாம் அலைபேசிகளுக்காய்
இறைஞ்சுகிறாய்
குரலின் நிழலில்
நினைவுகளைக்
குழைக்கிறாய்
குமுறும் ஆசைகளை
குரலால் அணைக்கிறாய்

இதயத்துடிப்பில்
எனது குரலைப்
பதிக்கிறாய்
உயிரின் ஓசையில்
இசையாக்கி
மகிழ்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் கேட்டவுடன்
மனம் கனியாகிறது
கனவு சுவையாகிறது
சுதந்திரப் படுக்கையில்
பாடுகள் உடைகிறது
நானில்லா வேளையிலும்
புனித நதியில் குளிக்கிறாய்
ஒவ்வொரு துமியிலும்
எனது குரலின் துணைகொண்டு

நினைவுகளை ஆடையாக்கி
அணிந்து கொள்கிறாய்
குரலோ குளிர் கூதலைக் கலைத்து
களிப்பூட்டியவாறு இருக்க

உனது எண்ணங்களை
தூரிகையாக்கி
வரைந்து கொண்டிருக்கிறாய்
எனது முகத்தையும்
முகவரியையும்

எனக்காக பிறந்த
தேவமாதுவாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நதியின் கண்கள்

ஒரு புனித நதியில் பயணிக்கிறேன்
சற்றுப் புரட்சி, முதிர்ச்சி, கருணை, காமம்
குழைந்த அலைகளில் மோதுண்டவனாய்
ஒரு மயான அமைதியை சுவீகரித்தவனாய்
கற்பனைகளை கருவில் சுமந்தவனாய்
பறக்க விளைகிறது பயணம்

எனது வார்த்தைகளை
அலைகளாக்கினால் அடுத்தவர்க்கு
அது அபத்தங்களின் கா(சா)ட்சியாகலாம்
கொஞ்சம் ஊடல்
கொஞ்சம் கூடல்
இரண்டும் தொட்டுப்பார்க்கையில்
சுகத் தென்றலின் பிரசவமாய்
அபத்தமும் வடிவம் பெறும்.

அங்கு தான் கற்பனை
தனது சிறகுகளை விரித்தவாறு
கனவின் விசையில் பறந்து மகிழும்
கனவில் குளிப்பதும்
கனவைக் குடிப்பதும்
சில பொழுதுகளில் சொர்க்கத்தை
தின்பது போல்

இது ஒரு புனித நதியின் பயணம்
இதில் புரளும் எண்ண அலைகளின்
கரையில் விசித்திரப்பூக்கள் சிரித்துப் புலம்பும்
எனது புதிய நதியின் பயணமும் முடிவும்
நதிபோல் ஓடாதவர்க்கு விசித்திரம் தான்
நதி கடலை அடைகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சொர்க்கத்தை முத்தமிடுவோம்
நதியைப் போல் ஓடிக்கொண்டால்
சொர்க்கம் வானமாகும்
வாழ்க்கை பறவையாகும்

எனது உள்ளக் கவலைகளை
எங்கோ எறிந்து விட்டு
நதியுடன் பிணைவதும்
நதியில் நசிவதும்
நதியால் அடித்துச் செல்லப்படுவதும்
கிடையாச் சுகமென்பேன்

நதி கடலைத் தேடி செல்கையில்
நாம் எதனைத் தேடிச் செல்கிறோம் என்ற
கேள்வியில் பூக்கிறது
வாழ்வு மீதான வெறுப்பும், வேள்வியும்.
எனது வெறுமை, தனிமை, தவிப்பு யாவும்
சுருங்கிப்போக
கந்தர்வமாகிறேன் நதிப்படுக்கையில்
காலச்சக்கரம் பல துண்டங்களாக
உடைக்கப்படுகையில்
என்றும் உடையா நதியின் துகிலில்
மீண்டும் முளைவிடும்
மீண்டும் கர்ப்பமாகும்.

மீண்டும் பிரசவமாகும்
எனது கனவின் சிசு என்பதால்!
சில பொழுதுகளில்
சில மனிதர்களுக்கு
கனவும், கற்பனையும்
சொர்க்க மாத்திரைகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையும் இரவுகள்

ஒவ்வொரு இரவுகளையும்
உடைத்துக்கொண்டிருக்கிறேன்
அவை உனக்கும் எனக்கும்
படைக்கப்படவில்லை!

சிதறுண்ட நமது நினைவுகள்
நாலா திசையும் பேசுகின்றது
அழுது கொண்டிருக்கும் நமது காதலை!
ஒரு வசந்த காலத்தையே வரைந்திருந்தேன்

வல்லமை சொக்கிப் போனது
நமது காதலில்
காலம் நமக்கான கருணையை
களவாடிப்போனது

அன்று உன்னை வரைந்த
பாதை எங்கும் பரிதவித்தேன்
கட்டடங்களும் மரங்களும்
நம்மில் அந்நியப்பட்டிருந்தன

அன்று உனக்கும் எனக்கும்
குடை பிடித்தவை இன்று
பிரிவு மழையில் குளிக்கச் செய்தன
பிரிவு மழையின் கண்ணீர்
சாக்கடைகளைப் பிரசவித்தன
அவை வேறுபாடுகளை ஆயுதமாக்கி
குளிர்ச்சியான நமது காதலை களங்கடித்தன
சமூகத்தின் சந்தி எங்கும்
சரிந்தது நமது காதல்

சாதியாக
மதமாக
இனமாக
மொழியாக
பணமாக
வேறு ஏதோவாக எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதின் திரிப

காலங்கள் கடக்க
எனது வயது ஞாலத்தைக் கண்டது
காமம் அழிய
எனது வயது காதலைத் தொழுதது
மோகத்தைப் போக்க
எனது வயது மோட்சத்தை நாடியது
மாதுவை மறக்க
எனது வயது மதுவைத் தேடியது
ஏழைத் தாயின் கண்ணீர் கரைக்க
எனது வயது மதுவை மறந்தது
நட்பை உயிர்ப்பிக்க
எனது வயது துரோகத்தை எதிர்த்தது
எனது சரித்திரம் எரிய
எனது வயது ருத்ரம் பற்றியது
எனக்கான வாழ்க்கை களவாடப்பட
எனது வயது போரால் வழக்காடத் துடித்தது
அடிமை வாழ்வை உடைக்க
எனது வயது போர்க்களம் செல்லத் துடித்தது

இன்று எரியும் அநீதியை
அணைக்க முடியவில்லை எனது
இரத்தத்தால்

இனி எரியும் அநீதியை எப்படி அணைப்பேன்
முடிவடையும் எனது வயதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படமாகிப் போன அவல வாழ்வு

என்
நகங்களைப் பிடுங்கினர் – பின்
நறுக்கினர் விரல்களை – உன்
வாழ்க்கை ஒளி பெற
இதோ மோதிர மென்றனர்
சுயத்தை மறைத்து
பயத்தை அணைக்கையில்
படமு மெடுத்தனர்

கண்ணி வெடிகளால்
மகன் கால்களைப் பறித்தனர் – பின்
பள்ளி செல்கையில்
சப்பாத்து தந்து
படமு மெடுத்தனர்
காம வெடிகளால்
கண்ணான
மனைவியைப் பறித்தனர் – பின்
மரணச்சான்றிதழுடன்
மலிவான செக்கும் தந்து
படமு மெடுத்தனர்

நிலங்களைப் பறித்துப் பின்
வீட்டினைத் தந்தனர்
வீட்டினைத் தருகையில்
பாலியல் லஞ்சம் கோரினர்
வீட்டினைத் தந்து - பின்
பிள்ளைகளைப் பறித்தனர்
காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைத்தேடி
காணாமலேயானோம்.
கனவான பூமியின்
கரிய ஆடுகளால்

மித்திரன்
மெட்ரோ
25.01.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பூமி

தமிழரின் பூமி இரத்தங்களின்
சாயத்தினால் வரையப்பட்ட
அவல ஓவியம்
தமிழர்கள் இன்று பாழடைந்த
பட்ட மரம்
அதில் காய்களில்லை
கனிகளில்லை
நிலத்தில் அமிழ்ந்த விதை யொன்றே
எச்சம்
ஒரு நாள் என்றோ வொருநாள்
அந்த விதை
பெரு விருட்சமாகும்
அன்று அதன் காய்கள் கதைக்கும்
கனிகள் இனிக்கும்
பூக்கள் சிரிக்கும்
அவல ஓவியம்
அழகு ஓவியமாகும்
நம்பிக்கை நிலத்தில்
நல்லன விதைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை

நீலக்கடலும்
வண்ண ரிசியும்
வந்தெம்மை தாலாட்ட
நாளும் நுழையும்
அவலம் - அக்கணமே
கலைந்து விடும்

கானக்குயிலின்
ஓசை எங்கும்
ஆசை மனதில்
சிறகசைக்க
வீசி வரும் தென்றல்
மேதினி எங்கிலும்
நேச நினைவை
நனைத்துச் செல்லும்

ஓடுகின்ற மேகங்கள்
ஒவ்வொன்றும்
பற்பல கதைகள் சொல்ல
கனவு வானாய்
விரிந்துருகி
நாளும் நெஞ்சம்
கவிதை பாடும்

கற்பனை எங்கும்
விற்பனையானால்
விண்ணும் மண்ணும்
விரகம் கொள்ளும்
ஆழ்கடலில் நாவாய் போல
நினைவின் கடலில்
கவிஞன் பிறப்பான்
கவிதை சமைப்பான்

மெட்ரோ
25.05.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகைக் கண்டேன்

முத்தக் கடலில் மூழ்க வைத்தாய்
அலையும் குழலில் குழந்தையானாய்
அழிவின் பிடியில் அலையச் செய்தாய்
முலையின் மலையில் மோதக்கண்டாய்

கனவின் கதிரில் கர்ப்பந் தரித்தாய்
பூவின் உடலை அணிந்து கொண்டாய்
ஆண்மை என்னை அதனில் கொண்டாய்
பவனம் எனதாய் பருகிக் கொண்டாய்

புவனம் முழுதும் உனதைக் கண்டேன்
புன்னகை அணிந்து தவழக் கண்டேன்
குறிஞ்சி முல்லை குலையக் கண்டேன்
அஞ்சி உன்னில் துஞ்சிக் கொண்டேன்
பஞ்சு உன்னைப் பற்றத் துணிந்தேன்
நெருப்பாய் நெஞ்சம் அழியக் கண்டேன்

கனவின் மடியில் மலரக் கண்டேன்
மலரும் உன்னைப் புணர்ந்து கொண்டேன்

பூவே நீயே சுகந்தம் தாராய்
சுகமாய் உந்தன் மடியைத் தாராய்
மலரே நீயே மயக்கம் கொள்வாய்
உறங்கும் சுகத்தை உணரத் தருவாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீதும் நன்றும்

கழுவுதல் நல்ல மருந்து
காயம் பற்றி கர்ச்சிப்பதும்
காயத்தைக் காப்பதும்
காயப் பிணியே
கவலை தீரா நோய்
கவலை பற்றிப் பாடுவதும்
கவலையால் வாடுவதும்
மனப் பிணியே
காப்பது நல்ல மருந்து
காலத்தை தூரிகையாக்கி
போர்ப் பறை இசைக்க
மாற்றம் மலராய் அசையும்
கற்பனை நல்ல நோய்
விற்பனையாவதும்
சொப்பனம் காண்பதும்
அற்புத சுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பை விழுங்கும் சூரியன்

நெருப்பில் பிறந்த சூரியன்
நெருப்புக் குழம்பில்
அவிவ தில்லை

நெருப்பைத் தின்னும் கோழிகளிடம்
நெருப்பு என்றும் வெல்லப் போவது மில்லை

இலைகள் அறுந்தும் கிளைகள் என்றும்
சாயப் போவது இல்லை
கிளைகள் சாய்ந்தும்
வேர்கள் தம்மை மூடிக் கொள்வது மில்லை

ஆளப் படர்ந்த அடிமை விதை
என்றும் அடங்கிப் போவது மில்லை

நிலம் பிளக்க எழும் விதை உயிர் போல
புது இலைகளுக்காகவும்
புது கிளைகளுக்காகவும்
தன்னைத்தானே தயாரிக்கும்

புதுச் சூரியனுக்காய்
தன்னைத் தானே மணந்து கொள்ளும்
அந்த நெருப்பின் சாட்சியாய்

ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை
01.01.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிசப்த பூமி

நிசப்தங்களை உடைத்து
குருதியாயத்துள் பதுங்குகிறாள்
யாராவது
அசிங்கப்படுத்துபவர்
ஆர்ப்பரிப்பவர்
அதர்மிகளைக்
காணுங் கணங்களில்
நிசப்தங்களுக்குள் சஞ்சரிக்கின்றாள்

ஆதாய மனிதர்களிடையே
சிக்குண்ணும் கணங்களில்
கலியுகத்தை கீறிப் பார்க்கிறாள்

பின்னான பொழுதுகளில்
கிலி பிடித்தவளாய்
நிசப்தங்களில் நீந்துகிறாள்
நிசப்தங்கள் இரம்மியமானவை

ஒரு துளி இரவில் பற்றும்
தாகத்தைப் போக்க
கொஞ்சம் கற்பனை
இன்னும் கொஞ்சக் கனவு
அங்கு கிடைக்கும்

ஏன்
அதர்மிகள் அப்பிய காயங்களைக் கழுவ
மருந்தும் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிப்புக்களைத் தாலாட்டும்
தொட்டிலுமுண்டு
எந்தக் கட்டில் சுகமும்
தோற்குமங்கு

நிசப்த தோட்டத்தில்
நிறைந்த மீன்கள் பூக்கும்
மெல்லிய சேலை தாவும்
நிலவு நீந்தும்
இதயம் கொஞ்சம் இதமாய்த் தெரியும்

யெளவனத்தின் நினைவுகளை
அங்கு தான் மீட்ட முடியும்
கவலைகளை கசக்கி எறியவும் முடியும்
இன்பங்களை நுகரவும் முடியும்
அரைக் கிழவனும்
முழுக் குழந்தையாக முடியும்

அங்கு அசிங்கம் இல்லை
ஆர்ப்பரிப்பு இல்லை
அதர்மிகளும் இல்லை

ஒரு தென்றல் தாயாகி
அமைதியாய்த் தாலாட்டும்
தூக்கத்தை சுகமாக்கி
சுதந்திர புஸ்பம் விதைக்கும்

மமகாரமற்ற அழகு விருட்சங்கள்
அகங்காரமற்ற கனிகளை
தந்து மகிழும்

ஓ... நிசப்தமே!
அவளது கண்கள் குத்தப்படுகின்றது
எழுந்து வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமை ஒரு மீள் நிரப்பி

அவன் அனைத்தையும்
அழிக்கப் போகிறான்
அவன் அழிப்பதும் அழகியல் போல்!
புது விருட்சங்களைக் காணும் கண்கள்
மரங்களை அணைப்பதில்லையா?
புது மலர்களில் சுனை பாய்வதில்லையா?
புது மழலை புன்னகையில் தோய்வதில்லையா?
புது மனங்களை கனவுகள் நனைப்பதில்லையா?
புதுமைகளை அறிய மனம் அலைவதில்லையா?
புதியன சுவைக்க உதடுகள் துடிப்பதில்லையா?
புதியன கேட்க செவிகள் நீள்வதில்லையா?
அதனால் அவன் அனைத்தையும்
அழிக்கப் போகிறான்
பழமைகள் நிம்மதியின் நிதர்சனங்களை
இழந்து விட்டதால்
புதுமைகளை நிரப்பி
அனைத்தையும் இரட்சிக்கப்பார்க்கிறான்
கடந்த நொடிக்கும் அடுத்த நொடிக்கும்
பழமை வேண்டும்
நினைத்த நொடியில் நிலைத்திருக்க
புதுமை வேண்டும் என்பதால்
அழிய வேண்டியன அழியத்தான்
வேண்டும்.
புதுமைகளில் பறப்பதாயின்
வாழ்க்கை மீதான சலிப்புக்களை
இழப்பதாயின்
சில பொழுதுகளில் சிலவற்றை
அழிப்பதும் அழகியலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை மீதான ஆத்ம ஜீவிதம்

விடுதலை மீதான ஆத்ம ஜீவிதம்
என்றும் அடங்குவதில்லை
மூங்கிலைக் குடையும் காற்று
இனிய நாதமாய் பிறப்பது போல்
உன்னில் விழுந்த சிறு துளியிலும்
புனித ஆத்மம் பிறக்கும்
அது ஒரு மீள் பிறப்பு
பழைய இழுவிசைக்குள்
தன்னை வியாபித்துக் கொள்ளும்
புதுச் சக்கரம் சுழல்வது போல்
கனவுகளோ
அன்று காற்றில் கலந்த விடுதலையைப் பாடும்
உருவங்களும் காட்சிகளும்
வேறு போல் தோன்றும்
புதிய பிரளயத்தின் சூட்சுமங்களுடன்
பயணிப்பது போல் நகரும்
ஆனாலும்
ஆத்மம் சதா விடுதலை மீதான
காவியத்தை சுமந்தபடி
அதை விதைப்பதற்காய் தன்னை சுதாகரிக்கும்
ஒரு நெருப்புப் பந்தை விளையாடுவதைப் போல்
வரும் நாட்களை எண்ணியே தன்னை வளர்க்கும்

அந்நாட்களில் சுதந்திரக் காற்றிலும்
விடுதலைச் சிறகிலும்
பறந்தபடி சிரித்துக் கொள்ளும்
மண்ணில் சிந்திய ஒவ்வொரு துளிகளையம்
அளந்து சிரிப்பு மலர்களை வீசிச் செல்லும்
விடுதலை மீதான ஆத்ம ஜீவிதம்
இப்படித்தான் தன் தீர்க்கதரிசனத்தை
விதைத்த படி எழுதிச் செல்லும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரப் பகட்டு

அம்மாவின் முகத்தில் திவலையின் கோடுகள்
கூனிக்குறுகி இறுதியைத் தேடும்
அவளின் தவிப்புக்கள்

கணம் கணம் நீண்டு செல்லும்
அவளின் காத்திருப்புக்கள்

எல்லாமாக எரி சாம்பலில்
எளிதாய் கலந்து விட
சூரியப் புன்னகையும்
மெதுவாய்க் கலைகிறது

சுதந்திரமாக மூடிக் கொண்டாள்

அழுவதற்கு கூட
ஒரு துளி கண்ணீர் இல்லா
அவளின் கண்களை
மூடப்பட்ட பல்லாயிரம் கண்களில்
மலர்வதா சுதந்திரம்?
இல்லை!

புதைக்கப்பட்ட பல்லாயிரம்
மலர்களின் கனவா சுதந்திரம்?
எதுவும் தெரியவில்லை!

அழிக்கப்பட்ட பறவையின் இலட்சியம்
அந்த எரி சாம்பலிலும்
உயிர்த்து எழும்

அம்மாவின் அழுகையும்
என்றோ ஒரு நாள்
ஆன்மாக்களை மீண்டு(ம்)
எழச்செய்யும்
அதுவரை விரியட்டும்
அழிப்பவனின் சுதந்திரப்பகட்டு

07.02.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலச் சுழற்சி

காலம் எழுதிக் கொண்டிருக்கிறது சொற்களை
சொற்கள் துடித்துக் கொண்டிருக்கிறது செயல்களாய்
செயல் வாழ்ந்து கொண்டிருக்கிறது நினைவுகளாய்
நினைவுகள் திருப்பி விடுகிறது அதே காலத்தை
இலை விழுந்து கொண்டிருக்கிறது காற்றினிலே
காற்று மிதந்து கொண்டிருக்கிறது தேசத்திலே
தேசம் எழுந்து நடக்கிறது வேட்கையிலே
வேட்கை வீரியம் பருகுகிறது கனவிலே
கனவு மிதந்து வருகிறது நினைவினிலே
நினைவு திருப்பி விடுகிறது அதே காலத்தை.

பூவரசு நிறம் மாறுகிறது புழுதியாலே
புழுதி ஆழ நீந்துகிறது காற்றினிலே
காற்று புயலாகிறது மனிதனாலே
மனிதன் மரணித்து போகின்றான் தனதாலே
நினைவு திருப்பி விடுகிறது அதே காலத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி மனித வழிபாட்டை மற

கடவுளரைக் கிழித்தெறியும்
நாட்குறிப்பை வைத்திருப்பவன்
சுய சிந்தை அறியான்
நாத்திகம் மென்ற
ஊத்தை இசையைப் பாடலாம்
ஆனாலும்
முசோலினிகளோ கிட்லறிசமோ
அவனை வழிநடத்துவதை ஒரு போதும்
அறிந்திருக்க வாய்ப்பில்லை
ஒரு வேளை கல்லறைகளுக்கு வாயிருந்தால்
இரண்டு கண்ணிருந்தால்
ஒரு கையேனுமிருந்தால்
எழுந்து கதைக்கவோ
எழுதிக் காட்டவோ செய்யும்
அக்கணம் இறப்புண்ட இனங்கள்
உயிர்த்தெழுந்து எதிர்கால
கற்பித்தலை நிகழ்த்தும்
அதுவரை இந்தக் குட்டி
முசோலிகளும் கிட்லர்களும்

புதுப் புது அர்த்தங்களைக் கற்பிக்க
நாம் அக்கிரகாரத்தில் தொங்க வேண்டியதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்கள்

எனது சொற்களை அவர்கள் களவாடினர்.
எத்தனை சொற்களை சேமித்திருப்பேன்.
மீண்டும் மலரும் எனது மண்ணின்
சுதந்திரப் பாடல்களை எழுதுவதற்காய்.

எண்ணிலடங்கா சொற்களை
பத்திரப்படுத்தி இருந்தேன்.
நந்திக் கடல் மடியில் கொத்துக் கொத்தாய்
மடிந்த போதும் சொற்களை நான்
மடிய விட்டதில்லை.
முள்ளி வாய்க்காலில் முடிவுறும்
துன்புற்ற சொற்களையும்
துடித்துப்போன சொற்களையும்
சேமித்திருந்தேன்.

அவை களவாடப்பட்டுக் கொண்டிருந்தன.

எந்தச் சொல்லை எப்படி நட்டால்
நம் எண்ணம் விளையுமென
சிந்திக்க யாருமில்லை
எஞ்சிய சொற்களையாவது விதைப்போம் வாருங்கள்
புரட்சியின் சொற்களை காத்தவரே
நாளை அவை விழுதெறிந்து பெரு விருட்சமாகும்
அன்று எமது சொற்களும் பாடும்

இறந்த காலத்தின் அவலங்களை
வரைய எந்த சொற்களும்
இருக்கப் போவது இல்லை என்பதால்
எனது சொற்களைத் தேடுகிறேன்
கண்டவர் உண்டா எங்கினும்

தினகரன்
08.04.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிய சிசு

தங்க வானம் எங்கிலும் தாமரைகள் பூக்கவில்லை
பருந்துகளின் ஆர்ப்பரிப்பில்
கொலைக் களம் நீள்கிறது

துப்பாக்கியின் முனையிலே
அதிகாரம் சன்னதம் கொள்கிறது
"உங்களை கடவுளிடம் சொல்வேன்" என்றவாறு
இறுதியை அணைக்கிறது சிரிய சிசு ஒன்று
அடைக்கலம் கொடுக்க எந்த நாடுமின்றி
குருதி எண்ணெயைக் கொடுக்கிறது
சிரிய மானுடம்

ஐ.நா வின் புத்தகத்தில் சிரியக் குழந்தைகள்
அரேபியக் கார்டூன்களில்
சமாச்சாரமாக்கப்படுகிறது

உலகின் உயர்ரக எண்ணெய் ஆக்கப்படும்
சிரியக் குருதிக்காய் போட்டியிடுகின்றன
அமெரிக்க சாத்தான்களும் ருஸ்ய ஸ்டாலிசமும்
குர்றானும் பைபிளும்
மோதிக் கொள்கின்றன
உலகின் உயர்ந்த தத்துவம்
உடல்களைக் கொல்வதே தவிர
உயிர் இறைவனிட மென்று

ஆதலால் அத்தனையும் பத்திரமாய் நடைபெற
பருந்துகளின் கண்களில் இரத்த தாகம்
இப்போதும் போல் எப்போதுமானால்
சிரிய சிசுவைக் காப்பது யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்ட என் தங்கை எங்கே

காணாமல் ஆக்கப்பட்ட என் தங்கை
வருவாள் வருவாளென
நாட்கள் கலைய
என் காத்திருப்பும் மெல்ல உதிர்கிறது
அம்மாவைப் பார்க்கும் ஒவ்வொரு கணமும்
கேள்விப் பூக்கள் தவித்துக் கொண்டன
தெய்வீகமான அவளின் முகம்
தேம்பி அழும் ஒரு குழந்தையைப் போல் தெரிந்தது
யாரிடம் போக யாரைக் கேட்க
ஒரு ஆறுதலிற்கு சாத்திரம் கேட்போம்
பின் சமாளிப்பை பழக்கப்படுத்தி
தூக்கத்தை அணைப்போம்
அம்மாளோ தூங்க மாட்டாள்
தனது பிள்ளையை
கனவில் தேடுவாள்
இந்நேரம் என் பிள்ளை
தன்னை மறந்ததோ
உண்டாளோ உடுத்தினாளோ
உறங்கினாளோ
ஒரு கொடிய மரண பூமியில்
என் பாசக்கார தாய் போல்
எத்தனை தெய்வங்கள் பாவியானார்கள்
இளமை மறந்து
முதுமை எனை அணைக்கையில்
முழு வாழ்வும்
இருளாய் நிறைகிறது
எந்தக் கங்கையில் மூழ்கினாலும்
தப்ப முடியாது
அவர்கள் என் அன்னையின்
கண்ணீர் கங்கையில் என்பதை
காலம் பரிசளிக்கும்
அவர்களிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகையும் நானும்

ஒரு மல்லிகையும் நானும்
பேசிக் கொண்டிருந்தோம்
மல்லிகை தினந்தினம்
மலரினைத் தந்து தவிப்பினைத் தீர்த்தது

சில மாந்தர்களைப் போல்
நாற்றமும் மாற்றமு மின்றி
எப்போதும் நானும் மல்லிகையும்
இனிதாகப் பேசி மகிழ்வோம்

சில பச்சை புற்களையும் வேப்பந்
தருவினையும் சுற்றமெனக் கொண்டந்த
மல்லிகை
என் சுற்றம் பற்றிக் கேள்வி நீட்டியது

கும்மிருட்டு வேளையில்
இருளாடை போர்த்தி தூக்கத்தை
அணைக்கையில்
ஆயிரம் நினைவலைகள் தூக்கத்தைக்
கலைக்கும்
அக்கணமெழுந்து மல்லிகையைப் பார்க்கையில்
வெள்ளைப் பற்களென
மலரதைக் காட்டி நம்பிக்கை பாய்ச்சும்

மழையிலும் வெயிலிலும் மல்லிகை
மலர்ந்தபடியிருக்கும்
மாலையிலும் காலையிலும் மல்லிகை
வாசமாய்த் துலங்கும்
இறப்பிலும் பிறப்பிலும் புற்களோடே உறவாடும்
அது மாந்தர்களைப் போல் தேவைக்கேற்ப
ஆட்களை மாற்றுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாந்தர்கள் "பறக்குவாட்டர்" கொண்டும்
"றௌண்டப்" கொண்டும் புற்களைப்
புதைத்தாலும்
பீனிக்ஸ் பறவையென புற்களும் முளைத் தெழுந்த
வண்ணமுள்ளன.
அது மண்ணுக்கும் புல்லுக்குமான பந்தம்

சில மாந்தர்களைப் போல் புற்கள் ஒரு போதும்
அழு மூஞ்சியாய்த் திரிந்ததில்லை

மல்லிகை உதிர உதிர பிறகும் மல்லிகை
மலர்ந்தவாறே உள்ளன
அது அன்பின்
இரகசியம்
சில மாந்தர்களைப் போல் அன்பை அளந்து
அளந்து பரிமாறுவதில்லை

மறுபடியும் தூங்கினேன்
மறுபடியும் எழுந்தேன்
மறுபடியும் மல்லிகை புன்னகைத்தது
மறுபடியும் மல்லிகையின் கேள்வி
அழுகையாய் அணைத்தது

மல்லிகைக்கு கூறினேன்
எனது சுற்றம் மல்லிகையும் வேம்பும்
இன்ன பிற புற்களுமென

மல்லிகை ஆச்சரித்தது

18.12.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் அழிவதில்லை

நீயும் நானும்
கடற்காற்றைக் குடித்து
எத்தனை நாளாச்சு?
வானம் எங்கும்
சூரியப் பழங்கள்
மறைந்து போகிறது
கடந்த கால இரவுக்கிடையில்
நாட்காட்டியைப்
புரட்டிப்பார்க்கிறேன்
பொன்னொளியில்
நீ குளிப்பதாய்
கனவு வருகிறது
கனவை விரித்துப் பாயாக்கி
உறங்கிப் பார்க்கிறேன்
முடியவில்லை
வெண்ணிலவு
தலையை உருட்டிக்
கேலி செய்கிறது

அன்று நீயா நிலவா
அழகென்ற பரீட்சையில்
என்னை நீ பூச்சியத்துக்குள்
அடைத்தது நினைவிருக்கிறது
எத்தனை சோடி
நட்சத்திரங்களைப் பார்த்து
பொறாமைப்பட்டிருப்போம்
இந்த நட்சத்திரங்களுக்கு
வாயிருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைப்பாடும் என்றாயே
நிலவுக்கு பெண்மை இருந்தால்
என்னை கௌவும் என்றாயே
உனது வார்த்தைகளைக்
குடித்துக்கொண்டிருந்தபோது
நீ அந்த ஆட்காட்டிகளின்
காதலை களவெடுத்துக் கொண்டிருந்தாயே
அத்தனையும்
நினைவுக் குவியலாய்
சிதறிக் கிடக்கிறது
அதனால் உனது
எண்ணங்களின் மீது எழுதிக்
கொண்டிருக்கிறேன்

நீ இல்லாத கடல் உறுமிக்
கொண்டிருக்கிறது
நட்சத்திரங்கள்
எரிகற்களாய் ஓலமிடுகின்றன
நானும் உனது
நினைவுக் கோமாவில்
அமிழ்ந்து கொண்டிருக்கிறேன்

மேகம் பறித்த
உனது கூந்தலைப் போர்த்துகையில்
கனவில் காந்தர்வம் ஆகிறேன்
நான் கனவில் வருவதை யாரும்
பார்க்க மாட்டார்கள்
நினைவுகளையாவது தின்போம்
நினைவுகள் அழிவதில்லை
அல்லவா?

மெட்ரோ
22.12.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமைக்கனி நீ

உந்தன் பூ இதழ் பிழிந்து
தேன் அருந்த நீ பதுக்கும்
தேன் கிண்ணப் புதிர்கள் அதிரும்

நுட்பமாய் நெளியும் உந்தன்
புள்ளின் உடல் வருடல் என்னை
உடையச் செய்யும் அக்கணமே

வாடிய பொழுதில் எல்லாம்
முடி கோதியே கிளர்ந்திட
கிலி கலையும் இனிதே

உந்தன் தங்கச்சுரங்கம் துளாவி
இன்பவீணை மீட்ட வரும்
கோடி சுகம் அழகே

பச்சை மனம் பஞ்சை மிஞ்சும்
உந்தன் விரல் உரசி
சிறகு முளைக்கும் தினமே

இச்சை கொண்டு இன்பம் தின்ன
உந்தன் உச்சி குளிர்ந்து
இறுகப் பிணைப்பாய் சகியே

எந்தன் மேனி நெஞ்சில் துஞ்சும்
உந்தன் நேசம் சுமக்க
சுதந்திரம் ஒழுகும் நிலவே

அடங்கா ஆசை கொண்டே
உந்தன் ஆடை ஆகி
வாழ்ந்து முடிப்பேன் மலரே

உனதாய் இனிதாய்
உனக்காய் நதியாய் நீளும்
எந்தன் காதல் கனியே

17.08.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் பெயர் காணாமல் ஆக்கப்பட்டவள்

அவளுக்கு பெயர் காணாமல்
ஆக்கப்பட்டவள்
அவள் இருக்கிறாளா இல்லையா என்ற
கேள்வியில் பூக்கிறது புன்னகை
மறந்த கணம்

அவள் காணாமல் ஆக்கப்பட்ட காரணம்
தற்போது காணாமல்
போனவர்களின்
புரட்சி முகமூடிகளும் தான்

முகமூடிகளைப் போட்டதும்
புரட்சியாளராகலாமா?
முகமூடிகளை அணிந்ததும் விடுதலை
கிடைத்திடுமா?
முகமூடிகளைத் தரித்துவிட்டால்
சாம்பல்கள் சாம்ராஜ்சியங்களாகுமா?

அவளுக்கு பெயர் எனது தங்கை
ஆதலால் காணாமல் ஆக்கப்பட்டவள்
அவளுக்குப் பெயர் தமிழிச்சி ஆதலால்
காணாமல் ஆக்கப்பட்டவள்

இப்படியான காணாமல்
ஆக்கப்பட்டவளின்
சுதந்திரத்தை எங்கு தோண்டி எடுப்பது?
போராளி முகமூடியாள்களிடமா?
அரச மாமிசிகளிடமா?
காலத்திடமா?
என சிதறிப்போகுது இப்போதைய
நினைவு

இரவு 8.49
06.03.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளொரு யுத்தப்பட்சி

அவளென்னை அழைப்பதும்
நான் அவளை அழைப்பதும் உலக
அதிசயமானது
கண்ணுக்கு தெரியா மின்மினிகளால்
கற்பனைத் தோரணங் கட்டியிருந்தேன்
ஒட்ட வேண்டிய முத்தங்கள் பற்றி
என் போல் பலர் புத்தகங்களைக் கூட
எழுதியிருப்பர்

அவள் அருகில் வந்தும்
முத்தங்களுக்கான இதழின் கதவுகள்
திறந்தும்
சத்தமில்லாமல் கலைகிறேன்
பா ஏறுந்த பறவையாய்

அவளுக்காய் நானும்
எனக்காய் அவளும் விலகும்
பிரார்த்தனையில் குழைந்தோம்

நீண்ட நெடும் தெருவெங்கும் உறங்கிக்
கிடக்க
அடைகாக்க அலையும் பறவை போல்
மனம் அலைந்து கழிகிறது

இப்போ தெல்லாம்
அவளுக்காய் இரவை
எரித்தல் அபத்த மென்பேன்
முத்தங்களால் நிறைந்த காதலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள்
இன்று சத்தமில்லா விலகல்களால்
நிறைகிறது

கைகள் பிசையும் பொழுதுகள்
இன்று கைகளை விலங்காக்கி
விலகும் பொழுதானது

காலம் ஒரு அதிசய பானமெனப் பருகிப்
பார்க்கும் மாந்தரின் வாழ்வியலில்
இந்த இசையும் மெல்லக் கலையுமென
சொல்கிறது நம்பிக்கையின் விசை

ஆதலால் அவளுக்காய் நானும்
எனக்காய் அவளும்
விலகி இருப்போம்

ஏனெனில் இப்போதெல்லாம்
இரு கைகள் இணைந்தால்
சத்தம் வருவதில்லை
யுத்தமே வருகிறது.

பிற்பகல் 1.16
17.03.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி எதுவென்பர்

மெதுவாய் ஓடினேன்
தெம்பில்லை என்றார்கள்
வேகமாய் ஓடினேன்
முரடன் என்றார்கள்
தனிமையில் இருந்தேன்
அனாதை என்றார்கள்
குடும்பமாய்ப் பழகினேன்
தப்பானவன் என்றார்கள்
தந்திரம் பேசினேன்
சித்தனென்றார்கள்
சத்தியமாய் வாழ்ந்தேன்
வாழத் தெரியாதென்றார்கள்
சரித்திரம் இயம்பினேன்
பித்தனென்றார்கள்
சட்டமியற்றினேன்
நிலமற்றவனென்றார்கள்
கவிதை எழுதினேன்
கவிஞனா என்றார்கள்
மானிடம் பேசினேன்
மனிதனா என்றார்கள்
இத்தனை கடந்தும்
மீண்டும் உயிர்த்தேன்
இனி எது வென்பர் இருளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மைகளின் உலகம்

அழகிய பொம்மைகளுடன்
அழகிழந்த பொம்மைகள்
ராச விளையாட் டேகின
பொம்மைகளின் உலகு
உணர்வற்றது தான்
காலம் கக்கிய எச்சிலில்
சுவாலிக்கும் ஒளி
காலத்தின் காற்றில் உயிரீன்பது
போல்
காலக்குளத்தின்
அலைகளுக்குத் தெரியும் தமது
எல்லைகளும் எக்களிப்புக்களும்

சில பொம்மைகள் பறக்க
நினைக்கும்
சில பொம்மைகள் உயிர்க்கத்
துடிக்கும்
சில பொம்மைகள் கனவில்
மிதக்கும்
பொம்மைகளின் பொத்தகம்
வினோதமானது
வினோத
பூமித் தோட்டத்தில்
பிரம்மன் இன்னுமின்னும்
பொம்மை விளையாட்டை
நிகழ்த்தியபடியிருப்பான்

போன பொம்மைகளைப்
பார்த்துப்
போகாப் பொம்மைகள்
காலப்பாடல்களைக் கற்றுக்
கொள்ள வேண்டும்
இல்லையேல் பொம்மைகளின்
ராச விளையாட்டில்
ரோஜாக்களைப் பார்க்கவியலா
முட்களே முகாரிக்கும்

காலை 5.18
15.05.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறி மீட்டும் நரர்

இரவுச் சேலையை கசக்கிப்
பிழிந்து நீர்த்துளி செய்வர்

பெண்ணிய மண்ணியத்துள்
கிடந்து அமிழ்ந்து அதன்
புலம்பல்களில் வெம்பித் தகித்து
வேர்த்துக் கொட்டுவர்

பல முகமாதுக்களை அரைத்துச்
சுட்டு இரவுத் தோசை தின்னும்
வெண்முகக் கள்வர்கள்

சிந்திய திரவத்தின் பின்
உள்ளிருந்து அழும் ஒரு
குழந்தையைத் தூங்கச் செய்யும்
அப்பாவி ஆண் அம்மாக்கள்

வயதுகள் பலதைத் தொலைத்து
சமூகச் சம்பிரதாய சங்கெடுத்து
ஊதி அலைந்து
வற்றிய பாலையில் நீரூற்றைத்
தேடும்
இவர்களின் வலியும்
மானுடத்தின் ஓர் சாபம்
என்பதை யாரறிவர்

சமூகச் சந்தையைச் செய்த
சாத்தான்களா
அல்லது குறி மீட்டும் நரர்களா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்களை விழுங்கும் சூரியன்

அவர்களின் பார்வையில்
ஈழப்பெண்களுக்கு
இரு மார்புகளும் தசைகளுமானதை
எக்காளத்துடன் பார்த்தனர்

அவர்களின் பார்வையில்
நிர்வாணிகளை பயங்கரவாதியாக்கி
மகிழ்ந்தனர்

அவர்களின் பார்வையில்
பிணங்கள் யாவும் புணரவெனத்
துணிந்தனர்

அவர்களின் பார்வையில்
குழந்தையர் யாவரும் புத்த பலிகளெனப்
பதிந்தனர்

இப்படியே தொலைந்தது துரோகத்தை
அறியா இனமொன்று

ஆயினும் நாளை சூரியன்
உதிக்குமெனும் ஆரூடத்தை
பதிந்தவராய்

மாலை 6.02
18.05.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிரான புன்னகைத் தீவே

பூக்களில் உன்னைக் கண்டேன்
புதுவித அர்த்தமானேன்

பாக்களில் உன்னைச் சுமந்து
பல்லக்கு நானுமானேன்

தீக்களில் உன்னைக் கண்டேன்
திருவிழியில் நான் நனைந்தேன்

மாக்களில் செல்லலானேன்
மாபெரும் கனவில் மிதந்தேன்

சாக்களில் சில்மித்தேன்
சாவையும் விளையாடத் துணிந்தேன்

ஆக்களில் ஏறி மிதந்தேன்
சக்தியென உன்னைக் கண்டேன்

நாக்களில் உன்னைச் சுமந்து
நெஞ்சத்து மஞ்சம் செய்தேன்

தூக்கத்திலும் அணையா விளக்கே
நான் தூங்கிட வளை நீ உடுக்கை

பிற்பகல் 9.19
22.05.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போய்ச் சொல் பிளாஃட்

யோர்ச் பிளாஃட் உன்னைக்
கொன்றவர்களுக்கு மரண தண்டனை
கூடாது
தமிழர்களைக் கொன்றவர்களைப்போல் பொது மன்னிப்பு
வழங்கி விடுவார்கள்

யோர்ச் பிளாஃட்
நீயும் என் நண்பனே
உன்னைப் போல் பல
கிரிசாந்திகளையும்
இசைப்பிரியாக்களையும்
இளைஞர்களையும் சப்பாத்துக் கால்கள்
புதைத்த நிலம் எனதென்பதால்

யோர்ச் பிளாஃட்
ஒரு வேளை நீயும் நானும்
வெள்ளையனாகவோ ஆரியனாகவோ
பிறந்திருந்தால் சப்பாத்துக் காலும்
சன்னங்களும் சர்வாதிகாரப் பூச்சுமான
மிருகமாய் இருந்திருப்போம்

யோர்ச் பிளாஃட்
நாம் செத்துக்கொண்டிருக்கையில்
உன் தலைவன் ஒபாமா அழவில்லை
ஆனால் நீ செத்த பின்பும்
உன் குருதியின் நிறத்தவர்
நாம் அழுகிறோம்

யோர்ச் பிளாஃட்
நீ போய் சேகுவரா மற்றும்
பிடல் காஸ்ரோ சுபாஸ் சந்திரபோசுக்கு
சொல்
மறக்காமல் எமது
நட்சத்திரப் புதல்வர்களுக்கும் சொல்
உன்னைப் போலுள்ளோரையும்
காக்குமாறு
நான் உனக்காய் பிரார்த்தித்தபடி
இருக்கின்றேன்
கல்லறைகளுக்கும்
கண்ணிருக்குமல்லவா?

இரவு 10.00
04.06.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வரமானவள்

தோழி உனது மௌனப்பாறைகளை உடைத்து
பரிசோதிக்கும் பறவையாகிறேன்

விசித்திரம் செறிந்த உந்தன் யாக்கை
எங்கணும்
என் ஆசைத்தூரிகையை விரித்திடத்
துடிக்கிறேன்

யாரோ எனைத் துன்புறுத்த
நினைக்கையிலும்
அடிமையின் ஆடையை
விரிக்கையிலும்
உனைப் பார்த்து வீரனாகிறேன்
இருளாடை போர்த்தும் பூமியின்
வினோத கணங்களில்
உனைக்கடவுளாக்கிப் பார்க்கிறேன்

நீ தரும் இரவுப் பானத்தை மென்று
மேகவலை நெய்கிறேன்

இந்த பிரபஞ்சத் தோட்டமெங்கணும்
உன் நினைவு மாத்திரையை எடுத்துச்
செல்கிறேன்

நான் துயர்ப்படும் கணமதில்
உன்னை அருந்தி சிறகு அணிகிறேன்

நீ எனை விட்டு எங்கேனும் செல்கினும்
நான் உனை எடுத்துச் செல்தலை
நீ எடுத்துச் செல்ல மாட்டாய்
என்பது வரம்

இந்த வரத்தில் தான்
நம் இருவருக்குமான பந்தத்துக்கு
உயிர் கிடைக்கிறதல்லவா தோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் ஒரு கவன இசை

அன்பே நான் பயணப்படுகையில்
'கவனமாய் பார்த்து வா' என்கிறாய்
கவனம் என்ற சொல்லில் தான்
வாழ்வின் ஆயுள் சுழல்வதை அறிவேன்நான்
கவனத்தைச் சூடுதல் சுகங்களின்
தொடக்கம்
கவனத்துக்கும் நமக்கும் கவனம் பற்றிய
தவிப்புக்கள் ஏராளம்

கவனமாக படி
கவனமாக போ
கவனமாக எழுது
கவனமாக செய்
கவனமாக இரு
என கவனம் பற்றி விரியும் குரல்கள்
அதிகம்

எனது நினைவுகளை உன்னுள்
ஆடையாக்கி அணிந்தவளே
அம்மாவின் பின்னான அம்மா
நீயென்பேன்
விதிகளின் முன் தோன்றும்
மதி நீ என்பேன்

நிலவுக்கு வானம் போல்
நீருக்கு நிலம் போல்
எனக்கு நீயென சிறகு விரிக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயம் போல் விரிந்திட்ட பிரபஞ்சத்
தோட்டமெங்கும்
எத்தனை மலர்கள்
எதுவும் உன்னைப்போல்
சுகந்தமில்லை கண்ணே

பள்ளியில் கவனமாய் படி என்பது போல்
மைதானத்தில் கவனமாய் ஓடு என்பது போல்
பரீட்சையை கவனமாய் எழுது என்பது போல்
என்னுள் ஓராயிரம் கவனங்களை
விதைக்கிறாய்

கவனத்தை கவனமாய் வைத்திரு
நாளை நமக்கோர் மகன் பிறப்பான்
அவனுக்கு கவனம் பற்றிய
பாடல்களைச் சொல்லிக் கொடுக்க
நாளை நமக்கோர் மகள் பிறப்பாள்
அவளுக்கும் கவனம் பற்றி பாடிக்காட்ட
நாளை நமக்கோர் நிலமிருக்கும்
அங்கே கவன வாசகங்களை எழுதி வைக்க

பிற்பகல் 6.23
28.06.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடிக்காததைக் கண்டு பிடி

பிடிக்காது என்ற வார்த்தையைப்

பிடித்துக்கொள்
பலர் பிடிக்காது என்பதை
பிடித்துக் கொள்ளாமலே
வாழ்வு பற்றிய பாடல்கள் பிடிக்காது
அலைகிறார்கள் பிறகு அழுகிறார்கள்

நண்பர் என்ன நினைப்பாரோ
அவள் என்ன நினைப்பாளோ
அயலவன் என்ன நினைப்பானோ
ஆசான் என்ன நினைப்பானோ
அரசியல்வாதி என்ன நினைப்பானோ
அடுத்தவன் என்ன நினைப்பானோ
என ஏராளம் வேலைகளுக்கு
"ஓ" மாகிறோம்
பிறகு வாழ்வு பற்றிய பாடலுக்கு
இராகம் வரவில்லை
தாளம் சரியில்லையென
இசையை வசைபாடுவது

ஓமோம் போடாதே
ஏன் எதற்கு எப்படி என்று கேள்
தலையை ஆட்டாதே
தலையை உயர்த்திப் பார்
தள்ளி நிற்காதே
அருகில் வந்து பேசு
கண்ணுக்குள் கண்ணை விட்டுப் பேசும்
மனிதன் நேர்மை நிரம்பியவன்
துணிச்சலென்ற துகிலால் முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்து
முகத்தை "பூ" வாக்கியவன்
பற்கள் மொட்டாய் மலரும்
அவன் வார்த்தைகள்
பூவின் வாசம் போல் விரியும்
அவனது வியர்வைகள் பூவின்
தேனைப்போல் வடியும்
சூடவும் முடியும்

உன்னால் முயலாத விடயத்துக்கு
ஓமோம் போடுவதும்
முகத்தைப் பார்க்காது தலையாட்டுவதும்
பிறகு வார்த்தைகளை வைத்து பஞ்சில்
கயிறு திரிப்பதும் சுத்த நடிப்பு
அது விரைவில் அறுந்து விடும்
உறவுகளும் இறந்து விடும்

பிடிக்காது என்று சொல்லிப்பார்
எது பிடிக்குமென்று தெரியும்
நம்பிக்கையில் கயிறு திரித்துப்பார்
தும்பிக்கை போல் ஒன்று முளைக்கும்
இனி எந்தக்கையும் தேவையில்லை
உனக்கு நீயே பல(கை)
அது தோணியாக நீ பிறர்க்கு
ஏணியாவாய்

மலையைப் பிடிக்காது போனாலும்
நீயும் ஓர் நாள் நதியாகி மலைக்கு
சண்டை போடுவாய்
முதலில் பிடிக்காததை பிடி
வாழ்வின் பாடல் இனிக்கும் என்பேன்

முற்பகல் 6.55
30.06.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்கணத்தை வாழ்

நானும் ஒரு கவிஞனும் நாயும்
பேசிக்கொண்டிருந்தோம்
இரவுகள் இழுத்து முடித்தூக்கத்தைத்
தரத்துடித்த போதும்
பேச்சின் எச்சில்
ஊறிக் கொண்டேயிருந்தது

கவிஞனுடன் பேசுவதானது
ஒரு படையெடுப்பைப் போன்றது
கவிஞனின் சொற்களும்
படையெடுத்துப் போரிட்டன
நானும் சிரிப்பின் துளிகளைக் கொண்டு
போரில் தற்காத்துக் கொண்டேன்

தற்காப்பில் எதுவுமில்லை
வாழ்வாங்கு வாழாதோர் தன்னைக்
காத்தென்ன பயன்
மகிழ்வாக வாழ்வோர்
தன்னைக் காக்காமல் என்ன பயன்

தூக்கத்திலிருந்த நாயோ நான்
தூவிய றொட்டித் துண்டை
கௌவி மகிழ்ந்தது
பிறகு தூங்கியது

நாய்க்கு நாளை பற்றியோ
நாளை மறுநாள் பற்றியோ
கவலையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்க்கு சனநாயகம் பற்றியோ
சர்வாதிகாரம் தொற்றியோ
கவலையில்லை
நாய்க்கு துரோகம் தோல்வி
யாவும் துயர்ப் படுவது மில்லை

நாய் றொட்டித் துண்டைப் பெற்றதும்
வாலை ஆட்டி என் நெஞ்சில்
குந்தியிருந்தது

நெஞ்சிலிருந்த நாயைக் காட்டிச்
சொன்னேன் அந்த நாயின் மகிழ்ச்சி
கூட எம்மில் இல்லையேயென

அக்கணம் கவிஞன் சொன்னான்
80களிலேயே யாரோ கவிஞன்
எழுதினானாம் இக்கணத்தை வாழ்ந்து
முடியென

நானோ தூக்கத்தை அருட்டினேன்
தூக்கம் கேட்டது நீ எக்கணத்தில்
தான் வாழ்ந்தாய் என

நான் பூச்சியத்திலிருந்து வெளிவரத்
துடித்தேன் வாழ்வின் மாயப்பயத்தை
உடைத்தவனாய்

முற்பகல் *11.03*
*06.07.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறுமை அழகானது

இல்லாத ஒன்று அழகானது
இல்லாத ஒன்றைக் காதலிக்கின்
இல்லாமல் போகும் இன்னாதன யாவும்
வெற்றுக் கடதாசிபோலே
வெற்று வானம் போலே
வெற்று மனமும் நிலையானது
நிம்மதியானது

ஒரு வெற்றுத்தாளை அழகாக்கும்
வர்ணம் பின் தனதாக்கி மகிழ்கிறது
ஒரு வெற்று வானை அழகாக்கும்
நிலவும் நட்சத்திரங்களும் வானை
வீடாக்கி ஆனந்திக்கிறது
நான் பிறரை எனதாக்கவோ பிறர்
என்னைத் தனதாக்கவோ
விரும்பவில்லை
நான் நானாயிருக்கையில்
பறப்பதற்கு சிறகு தேவையில்லை
ஆதலால் வெறுமை அழகானது

வெறுந்தெருக்களில் அமைதி
வெறுந்தரையில் தூக்கம்
வெறு நீரில் தாகம்
ஆதலால் வெறுமையில்
பெருவாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வெறுமையை விரித்துத்
தூங்குகையில்
காலத்தின் பாடல்கள் தாலாட்டும்
கடன்காரன் கனவில் வரான்
அதிகாரம் அணுவும் வரா
ஆசைகள் எங்கும் இலா
இன்ன பிற பிரிவினைகளிலா
வாழ்தலில்
வெறுமை ஒரு நிறைவை தரும்

என் மனதை வெறுமையாக்கித் தூங்கும்
கணத்தில்
இந்த உலகில் மனிதர்கள் இருப்பதை
மறப்பது சுலபமாகிறது எனக்கு
மனித முள் குத்தும் போதெல்லாம்
வெறுமையைத்தான் பூக்களாக்கி
மகிழ்கிறேன் இனியும்

பிற்பகல் 1.51
15.07.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கடலாகக் கரைவோம்

அழகான உனது ஸ்பரிசங்களைச்
சேமித்து வைத்திருக்கிறேன்
ஊர்க்குருவிகளாக நீயும் நானும்
சுற்றித் திரியும் தெருக்களைத் தேடிப்
பார்க்கிறேன்

பச்சைப் புல்வெளியில் உனது பச்சை
முத்தங்களைப் பறிக்கும்
வித்தைகளைக்
கற்றுக்கொண்டிருக்கிறேன்
மயில்பீலியிலும் மெல்லிய உனது
கூந்தலைப் பாயாக்கி நானோர்
சாமகானமிசைக்கும் அந்தர நிலையை
எண்ணிப் பார்க்கிறேன்

வண்ணங்கள் குழைத்த தேன் சொட்டும்
முத்த வார்த்தைகளைக் குடிக்க
கையேந்தும் பிச்சை நிலையின்
உச்சத்தினை ஒத்திகை பார்க்கிறேன்

காட்டுக்கோழி போல் நீ பதுங்க
கண்மூடி பால் குடிக்கும் பூனையாகி
உன்னை உண்ணும் கண்ணை
முகத்தில் அணிந்து பார்க்கிறேன்

யாரும் காணாத செவ்வரத்தைச்
செடிக்குள் உன்னை நுழைத்து
அங்கமெல்லாம் பூக்களைச் செருகும்
படப்பிடிப்புக்குத் தயாராகிறேன்

நீ ஆட மறுக்கும் கணத்திலும்
உன்னை
ஆட்டுவிக்கும் பாட்டைப்பாடும்
பரவசத்தைப் பூசிப் பார்க்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது இராகத்தைப் பருகி வெறி பிடித்து
நாணாடும் நதிமண்டலத்தில் நீ
நதியாகிக் கரை புரண்டோடும் அதிசத்தை
அருந்த வருந்திப் பார்க்கிறேன்

எனது சுனைகளைக் கொடுத்து
உன்னை அணைக்கும் ஆனந்த
தாண்டவத்தில் நான் ஆண்டவனாகிப்
பாாக்கிறேன்

மூச்சுமுட்ட பல உலகை உன்னிலே தேடி
உனது மலை நதி பள்ளத்தாக்கு
புல்வெளி பனித்துளி எங்கும்
பாசத்தைத் தூவி ஆசை குழைத்து
ஆகக்கூடிய சுகத்தைப் பருகிப் பார்க்கும்
கற்பனையை வரைகிறேன்

இறுதியில் நீயும் நானும் கிழவன்
கிழவியாகி காதல் குழந்தைகளுக்கு
நடை பழக்கும் பாக்கியத்தில்
பக்குவப்படுவோம்

என்னைப் போலொரு குழந்தையை
நீயும்
உன்னைப் போலொரு குழந்தையை
நானும் முத்தமிட்டவாறு
சத்தமில்லா இரவுகளைக் கரைத்துக்
குடிக்கும் நினைவுகளுடன்
காலத்திற்கு நன்றி சொல்லி
விடை பெறுவோம்
எமது காதல் வாழும் என்ற
நம்பிக்கையில்
நாம் கடலாவோம் கரையில்லா

இரவு 11.53
19.07.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பு ஒரு தவம்

நீ என் நினைப்புக்களை விரித்து
வைக்கையில்
நான் மௌனங்களை விதைக்கிறேன்
இந்த விதை வளருமா நீளுமா
சிந்திக்காது
நினைப்பின் புனலாய்
புன்னகைக்கிறாய்

உனது காத்திருப்புக்களை நீட்டியவளாய்

நான் மௌனியான போதெல்லாம்
நிறமற்ற காற்றாய்
நிழலாகி விழுகிறாய் எனைச்
சுமந்தவளாய்

பெண் கருப்பையின் முன்னரே சுமக்கப்
பழகிறாள்
நீ என்னைச் சுமப்பதைப் போல்

இன்னும் உன்னைச் சுமக்கவிடக்
கூடாதென்கையில்
சுமைகள் என்னில் புயலாய் விழுகிறதே
என்னவளே

ஆனாலும் நீ நம்புவாய்
நினைக்கிறேன்
புயலின் பின் அமைதியென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ அழைக்கும் போதெல்லாம்
அருகில்லா எந்தன் இதயம்
இப்போதெல்லாம் பெரு நதியாகி
நீள்கிறது
வேகும் பேயாகிறது

நீ எதிர்பாராத கணத்தில்
முத்த மழை சிந்தும்
வானத்தை இரசிப்பாய்
அன்று உணர்வாய் காத்திருப்பு ஒரு
தவமென
காத்திருப்பு ஒரு வேள்வியென
காத்திருப்பு ஒரு ஊற்று என

நிலத்திற்காய் காத்திருக்கும் மக்கள் போல்
என் நினைவுக்காய் காத்திருப்பவளே
காத்திருப்பு மகா சோதியென
உணர்வாய்
நினைவின் நீராக

இரவு 9.07
26.07.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனது திறமையில் இரசிகனானேன்

உனது திறமைகளைப் பார்க்கையில்
இறந்த எனது நரம்புகளுக்கு
புது இரத்தம் பாய்கிறது

நீ என்னுள் விழுந்த நிலவாய் அல்லாமல்
என்னைச் சுமக்கும்
தெப்பமாகையில்
நான் குழந்தையாகிறேன்
உனைத் தாயெனக் கொண்டு

அன்பின் மரத்தில்
ஆனந்தம் மட்டுமா பூக்கும்
பெண்ணே
உன் சாதனை நிறைந்த புன்னகை
மலர்களுமல்லவா

இரவு வீணையை மீட்டும் ஒவ்வொரு
கணத்திலும்
கனவு நதியாய் பெருகிறாய்

நினைவெனும் தூரிகை பிடித்து
காரிகை உன்னை
வரைகிறேன்

ஒரு நாள் அறிவாய்
என் மனம் ஒரு நந்தவனம்
நீ என்னுள் பூக்கும்
பூங்காவனமென

நீ திறமைகளைப் பெருக்கு நான்
இரசிகனாகிறேன்

இரசிப்பதில் தானே
வாழ்வின் ருசியும்
நமது நிசியும் உயிர்க்கிறதல்லவா

இரவு 9.56
15.08.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ எந்தன் சக்தி

நீ எனதருகில் வருகையில் சக்தியேறுகிறது
சிவனுக்கு சக்தி போல் நீயுமாகலாம்

இந்தப் பிரளயத்தின்
சுழற்சியை உன்னில் காண்கிறேன்

வெறும் வார்த்தை மனிதரிடம்
போதையாகி
நேரத்தை வீணாயிறைக்காமல்
எம்மைச் சுற்றிய வெற்றுக்
கோசங்களிலும்
புகழ் முட்டைகளிலும் தூங்கி யுழலாமல்
கிடக்காமல்
நான் உன்னைப் பற்றிக்
கவிதையெழுதி
இந்த வாழ்வை வண்ணமாக்க
நினைக்கிறேன்

நான் அறிவேன் சகியே
ஆருடங்களால் அமைந்தது நமது வாழ்வு
ஆருடங்களின் கயிற்றால் நம்மை
இந்தக் கரிய மனிதர் கட்டினர்
விசச்செடிகளை என்னிடம் தந்து
உனக்கும்
உன்னிடம் தந்து எனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாறச் சொல்கின்றனர்
எரிகற்களை நட்சத்திரங்களாய்
ஒப்புவிக்கின்றனர்

நானோ
உன் பற்றிய நினைவுகளை
மீட்டுகையில்
சிவனாகிறேன்
நீ சிவனுக்கான சக்தியாகையால்
இனி தேவையற்ற மனிதர்களை
தேவர்களாக்க மாட்டேன்
வெறும் வார்த்தைகளில்
வெள்ளி மலர் கொய்யேன்
புகழ் மாந்தர்களில்
நசியுண்டு போகேன்

உந்தன் நினைவெனும் பாயில்
துயில்வேன்
உன் புன்னகைத் தேனீரை
அருந்திய பின்

ஏனெனில்
தூக்கத்திலும் நீ
எந்தன் சக்தி அல்லவா!

காலை 10.32
02.09.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்கணமே அக்கணம்

இக்கணத்தில் வாழெனு
இடித்துரைத்த பலரை
இக்கணத்தில் நினைக்கிறேன்
தக்கன பிழைக்குமென
தகாதன சொல்லவில்லை
இக்கணத்தைப் போல
இனியும் வருமா கணமென
இக்கணம் கேட்கிறது
இக்கணத்தில் வாழ்பவன்
இலக்கணத்தைப் போன்றவன்
நேற்றைகளை சுமக்காதே
தலை பாவம்
நாளைகளை அடுக்காதே
வாழ்தல்பாவம்
இன்றைகளை இனிமையாக்கு
அக்கணமும் அழகெனவாகும்
நாளையென்பது இல்லை போலே
இல்லைகளே நிரந்தரம்
அதை நினைக்கையில் அந்தரம்
வெறுமை பேசும் தத்துவத்தை
எங்கும் காணாய்
மனிதனொரு புத்தகம்
சில புத்தகம் எழுதப்படாதவை
சில புத்தகம் வாசிக்கப்படாதவை
சில புத்தகம் வாசித்தும் விளங்காதவை
சில புத்தகம் வாசித்து வலிப்பவை
ஆதலால் இக்கணத்தை வாழ்
இக்கணத்தையே காலம் பேசும்

இரவு 10.04
06.09.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரப்பியை நினைக்க வைக்கும் மௌனங்கள்

காலநதியின் பிரசவத்தில் நீயும் நானும்
சந்தித்தோம்
காற்றின் கந்தர்வ சோம்பல் முறிப்பில்
வேப்பம் பூவா யுன் மடி விழுந்தேன்
வேம்பின் சுவை கைப்பென்றாலும் கைவிலக்கி
விடுவாரில்லை நீயும்தான்

ஏகாந்த இராப்பொழுதில் என் நிழலில்
தூங்குகிறாய்
எனது காற்றை உன்னுள் நிரப்பி பஞ்சவர்ணக் கனவு
நடுகிறாய்

நீ நட்ட கனவு ஒன்றா இரண்டா
அல்லது நான் நட்ட கனவு ஒன்றா பலவா

நான் மரமாகி
உயரக் கிளையெறிந்தபோது
ஊஞ்சலாகி துஞ்சுகிறாய்
பின் கெஞ்சலாகி மரங்கொத்தி போல்
கொஞ்சுகிறாய்
நீயிட்ட துளை யாவும் என் மனக்கோப்பையில்
சுவைக்கிறது நினைவாய்
நானிட்ட முத்த விதைகள் என்னைப்போல்
விழுதெறிவது எப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பிரளயத்தில் காற்றில் பிணையுண்டோம்
கனவுப்பிரபஞ்சத்தில் காற்றில்
முளையுண்டோம்
நினைவுப்பிரம்மத்தில் கவிதை
சமைத்தோம்
பிணியின் கூண்டில்
வெற்றிடமாய்ப்போனோம்

வெறுமையும் அழகு என என்னை நானே
குளிர்விக்க முனைகையில்
குழப்படி செய்கின்றன என் வீட்டில்
நுழையுண்ட மைனாக்கள்
மீண்டும் வெற்றிடம் பற்றி எண்ணுகிறேன்

சொற்கள் வீணையாகி அழுது தீர்த்தன
அந்த மைனா வடிவில்

வாழ்வு வெறுமையில்லையென
எழுதிச் சென்றன யாவும்

காலை 09.07
11.09.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கமற்ற இரவுகள்

நான் தூங்கப் போகிறேன் இரவே
உனது கரிய மலர்களைப்
போர்த்துகையில்
நிலவின் புன்னகை தெரிகிறது
நட்சத்திர மலர்களை ஆங்காங்கே
பதுக்கி
கனவுப்பாடம்
நிகழ்த்துகிறாய்

நான் தூங்கும் ஒவ்வொரு
துளிகளையும்
நீ தான் தருகிறாய்
ஆனாலும் சில வஞ்சக
மனிதர்களைப் போல்
நீயும் தூங்க வைத்து எழுப்புவது
அல்லது அதிகாலையில் எழுப்பாமல்
விடுவது உனது கெட்ட பழக்கம்

இரவே நீயும் நானும்
காதலாகிக் கசிந்துருகும்
தருணத்தில்
காற்றின் கூந்தலால் என்னை
வருடுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நெஞ்சில் குந்தியிருந்து
சிந்தனையை தூண்டுவதும்
பின் முதுகில் ஏறியிருந்து ஒரு
குழந்தையைப் போல்
விளையாடுவதும்
ஒரு அலாதியின்பமென்பேன்

இப்படித்தான் இரவே
உன்னைப் பற்றிப் பேசும்
இந்த ஊருறங்கும்
போதினிலே
இப்படித்தான் இரவே
உன்னுடன் உறவாடும்
இந்த உலகுறங்கும் போதினிலே

ஆற்றைப் போல் வருகிறது கண்ணீர்
காணாமல் ஆக்கப்பட்ட என்
உறவுகளின் உறக்கமற்ற
இரவுகளை எண்ணி

இரவு 11.37
11.09.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரியாததால் இனிக்கிறது வாழ்வு

ஒவ்வொரு ஜீவிதத்துள்ளும் நீயிருக்கிறாய்
அறிகிறேன் நான்
எழுத்துக்களை விமானமாக்கி நான் பறந்தலைகிறேன்
இது வரை உன்னைக் காணவில்லை

நீயென்பதை இன்னும் நான் அறியவில்லை
நீயென்பதன் வயது
நீயின் நிறம்
நீயின் முகம் அகம் புறம் எதையும் அறிகிலேன்
நீயிருக்கும் இடத்தைத் தேடி பயணிக்கையில்
எழுத்து நதியாகி விரிகிறது ஏன்
நீ கடலா இல்லை அதன் கண்ணீரலையா

நீயென நானெழுதுகையில்
சிலர் காதலியாவென கேள்வி நீட்ட
வேறு சிலர் கற்பனையாவென கதவு மூட
நான் புன்னகையால் உறவை மூடுகிறேன்
மௌனத்தினால் விலகி ஓடுகிறேன்

நீயார்
நான் யார் என
பலருக்கு தெரிவதில்லை
தெரிந்தால் தேடலேது தேவையேது வாடலேது
வசந்தமேது

இனியும் நான் எழுத்தின் மஞ்சத்தில் பறக்கத்தான்
போகிறேன்
உன்னைப் பற்றி வரையத்தான் போகிறேன்
உன்னை யாரென்று கேட்பவர்களால்
உனக்கு உயிர் வரத்தான் போகிறது

ஒரு???.போல்

இரவு 10.30
23.10.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமையீனும் எழுத்து

எனது சுமைகளை யாரிடம் ஒப்புவிக்க
சுமைகள் பற்றி எழுத நினைத்தால்
எழுத்துக்களில் சில கழுதைகளாகவும்
ஒட்டகங்களாவதும் கண்டு
கனத்துப்போகிறது இந்த நெஞ்சம்

ஒரு மனிதனிடம் இலவசமாய்க் கிடைப்பது
புன்னகையும் கொஞ்ச சொற்களும்
என்பது எல்லோருக்கும் தெரியும்

இப்போதெல்லாம் புன்னகையும் சொற்களும்
தட்டுப்பாடாகிக் கொண்டேயிருக்கிறது

இருண்ட யுகத்தின் பாடல்களை
நானேயெழுதி நானே கேட்டு நானே இரசித்து
நானே எனக்கு விருது வழங்கும் கேளிக்கையை
காலம் கையளித்துள்ளது

கூடவே அணுகுண்டுகளும்
அமர்க்களமாய்த் திட்டம் போடும்
அசகாய சூரர்களின் மாடங்களும்
சேர்ந்து அழுகின்றன

இப்பொழுதெல்லாம் யாவருக்கும் தேவைப்படும்
முதலுதவி ஒரு புன்னகையும்
கொஞ்ச சொற்களும்
ஏனெனில் அதுவே இறுதி எழுத்துக்களாய்
அமையுமல்லவா

மாலை 4.32
28.10.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ருத்ரன் என்கிறாய்

காலம் துப்பிய எச்சிலைப் பன்னீராய்ப்
பருகினேன்
ஆதலால் பேயும் பிசாசும் கலந்த நல்லவனாய்
நானிருக்கலாம்
இங்கு பலரப்படித்தானே

நல்லவனென்பது என்ன பெண்ணே
உன் நெஞ்சில் துஞ்சுவதா?
உனது உதரத்தில் ஒரு பிஞ்சை விதைப்பதா?
உனது உதடுகளில் வீணை மீட்டுவதா?
அல்லது பொன்னகைகளால் உனது புன்னகையை
அகழ்வதா?
அல்லது இவைபோலெல்லாம் நடிப்பதுவா?

நடிப்பவர்களுக்குத்தானே உன் போன்றோர்
நல்லவன் விருதை வழங்குகிறார்கள்
உண்மையில் சுயநலத்தின் குழந்தை தான்
நல்லம் என்ற கள்ளம்

காலம் அதன் பாடுகளில் என்னைத் துப்பியுள்ளது
உன்னை என்னுள் அப்பியுள்ளது

ஆதலால் உன்னுள் இருக்கும் நல்லதென்று சொல்வதையும்
என்னுள் இருக்கும் கள்ளமென்று சொல்வதையும் கொண்டு
கலவி செய்வோம் வா

அதற்கு நிசியின் பரத மென்றோ
காளியாட்டமென்றோ
பேயாட்டமென்றோ பெயர் வைத்து மகிழ்வோம்
இங்கு பலர் அப்படித்தான்
நாமும் நடனத்தில் புரள்வோம்

கடைக்கு வந்த கிழவி சொல்கிறாள்
நாளை நிலவு புக
நா மகல்வோ மென

இரவு10.30
1.10.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் காலத்தின் பிள்ளைகள்

நீ வானமே எல்லையென்கிறாய்
நான் வானமே இல்லையென்கிறேன்

நீ தூங்கவா என்கிறாய்
நான் தாங்கவா என்கிறேன்

இப்படியே நீயும் நானும் கற்பனை மையை ஊற்றி
எழுதி வைத்த
கவிதைகளும்
இன்று பிள்ளையீனும் காலங் காண

நாம் இன்னமும் பள்ளி செல்கிறோம்
பாடங் கற்கிறோம்
பட்டம் விடுகிறோம்
எல்லாம் எதற்காக

எங்கள் எழுத்துக்களையாவது கடலாக்கி மகிழவா
எங்கள் எழுத்துக்களையாவது மரமாக்கி சோலை யாகவா
எங்கள் எழுத்துக்களையாவது பூவாக்கி சுகந்தம் சுவிக்கவா

இனியும் அறியப்படாத காலத்தின் பாடுகளை எழுதிக்
கொண்டிருப்போம்
நீயும் நானும்
ஏனெனில் இன்றும் இனியும்
நாம் காலத்தின் பிள்ளைகள்

நாம் எதைக் கேட்கிறோமோ
காலம் அதைத் தரும்
அதைத்தான் தரும் மனிதா

இரவு 8.53
01.11.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரமுகம்

நேரத்தைப் பற்றி நேரத்துடன்
பேசிக்கொண்டிருந்தேன்
நேரம் நேரமாச்சு என்றேனும்
சொல்லுமாவென மனம் கேட்ட போதும்
நேரம் செல்வதாயில்லை
அது என்னுடனே அணையுண்டு
இணையாகியது

முன்னொரு காலத்தில் பல தடவை
சிந்தித்திருப்பேன்
ஒரு நாளில் நாற்பத்தெட்டு மணித்தியாலமானால் என்ன
ஓரிரவு ஈரிரவானாலென்ன

தூக்கத்தை இன்னும் கொஞ்சம் நீட்ட வேண்டும்
இரவே நீ போகாதே என்றும்
விளையாட்டை இன்னும் கொஞ்சம் அகட்ட
வேண்டும்
பகலே நீ போகாதே யென
நேரத்தை கெஞ்சியிருப்பேன்
அப்போதெல்லாம் எனது கெஞ்சல்களைக்
கேக்காத நேரம்
அப்போதெல்லாம் எனது காதலியிடம்
கதையளக்க விடாத நேரம்
அப்போதெல்லாம் அம்மாவுடன் அன்பைப்
பருகவிடாத நேரம்
அப்போதெல்லாம் பரீட்சையை எழுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாத நேரம்
இப்போதெல்லாம் நீட்டி நிமிந்து என்னுடனே
படுத்துக் கொள்கிறது
என்னை விட்டு அகலுவதாயில்லை

தூங்கும் அலுவலகங்கள்
பள்ளிகள்
கல்வி நிலையங்கள் போல்
நேரமும் தூங்கிக் கொண்டது போல்

பின் எழுந்து
பேருந்தில் பெண்களைத் தடவுபவர்கள்
கண்ட இடத்திலும் கட்டிப்பிடிப்பவர்கள்
மேல்மாடியில் நின்று குடிசை மேல் குப்பை
கொட்டுபவர்கள்
பாராளுமன்றத்தில் கதகளி ஆடுபவர்கள்
தேர்தல்களில் தேரையாவோர்
என எல்லோரையும் தனிமைப்படுத்தி சிரித்தது

காலம் அழகானதென அதனை இழுத்துப் போர்த்தி
தூங்குகிறேன்
நிச்சயம் நேரம் எனக்கொரு
நேரமாகுமென

இரவு 9.51
05.11.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்பதை அறியா மழையாள்

மழைக்கு நம்மைப்போல்
யாவுமெனில்
ஒன்று மழை எனது காதலியாக
இரண்டு மழை எனது நண்பியாக
மூன்று மழை எனது தாயாகக் கூட
இருந்திருப்பாளென
பேசத்தலைப்பட்டிருப்பேன்

மழைக்கு நம்மைப் போல்
யாவுமில்லையே
ஒவ்வொரு கார்த்திகையிலும்
வானத்துக்கு திருமணம்
வானம் மூன்று மாதத்துள்
மண்ணைப் புணர்ந்து
புன்னகைக்கிறது.

மழையை ஒரு தூதுவிச்சியாகவோ
அதன் பிள்ளையாகவோ கூட
பயன்படுத்தியிருக்கலாம்

இங்கு சிலர் பட்டாம் பூச்சிகள் போல்
ஆடை கழற்றி ஆனந்தம் பாய்ச்சவும்
வேறு சிலர் காட்டுப் பட்சிகள் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தையில் புரண்டு தத்தை மொழி பேசவும்
மழை மலர்களாய் பெய்கிறது
இன்னும் சிலர் மகரந்தச்சேர்க்கை
நிகழ்த்த
மழை நீவி விடுகிறது

ஆனால் இந்த மழைக்கும்
மழையினில் குதூகலிக்கும்
காட்டுப் பட்சிகளுக்கும் அல்லது
மாளிகை வாசிகளுக்கும் அல்லது
மானுட மாமிசிகளுக்கும்
தெரிவதில்லை

ஈழத்தில் முகமிழந்த மனிதர்கள் போல்
முகமிழந்த வீடுகளும்
வனப்பிழந்த வண்ணத்துப் பூச்சிகள் போல்
படிப்பிழந்த பச்சைப் பிஞ்சுகளும்
ஓயாத காற்றுப் போல்
சாயாத இரவுகளைக் காணும்
குழந்தையர்
அங்குதான் நடுங்கிக் கொண்டிருப்பர் என்பதை!

இரவு 9.52
11.11.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கும் விலங்கும்

ஆத்மார்த்தமான இந்த அன்பின் பெருவெளியை எங்கு தேடுவது

தீபங்களிலா
தீபக் கைகளிலா

ஒரு நிலவைப்போல் மனது நெய்யும்
பல நிலவுகளின் வெளியாகும் நிலத்தை பார்க்க
வீட்டைப் பார்க்க
கடைகளைப் பார்க்க
புன்னகைக்கு சிறகு முளைக்கிறது
கூடவே கண்ணீரையும் உயிர்க்கச் செய்கிறது

பார்த்தேன்
தீபங்களையும் மனங்களையும்
காற்றின் தீராத பக்கங்களையும்
எழுத முடியாவெழுத்துக்களையும்
எண்ண முடியா நினைவுகளையும்
ஒளி இவளவு நாளும் எங்கு ஒளித்து இருந்தது
இப்போதெல்லாம் ஒளியை ஒழித்து வைப்பதில் வீராப்பு கொள்கிறார்கள்
மிருகப்பால் அருந்தியவர்கள்

நிலத்தின் முளைத்த ரிசிகள் போல்
எங்கள் நினைவுகளிலும் தோன்றுமென்றால்
வைத்திய சாலைகள் குறையுமல்லவா

ஆனாலென்ன செய்ய
விளக்கின் விரல்கள் விலங்கால் இரட்சிக்கப்படுகின்றனவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவனச் சிறகு

உனது கவனம் பற்றிய கருத்துக்களால்
எனது பய மாயை எரிகிறது

புயல்க்காற்று தூற்றும் போதும்
அடைமழை அள்ளும் போதும்
வேறு ஏதோவான இயற்கையின் கோபக் கரங்கள்
நசுக்கும்போதெல்லாம்

கவனம் கவனமென
எல்லோரது நாவும் ஒரு அறமார்ந்த இசையை மீட்டிச்
செல்கிறது.

என் மீதான கவனக் குவிப்புகளை எத்தனை முறை
அனுப்பியிருப்பாய்
அக்கணமெல்லாம் அண்டப்பெருவெளியில்
பறந்தின்பிப்பதாய்
எனக்குள்ளொரு ஆனந்தம்

ஒரு அம்மாவைப்போல்
கவனமென நீ தரும் வார்த்தையில்
நான் மீளப் பிறந்துகொண்டிருக்கிறேன்
கவலையின் கரிய பக்கங்களை மறந்தவனாய்

கவனங் கூறிய உனது நாவில்
இத்தனை மலர்களா!

கவனமெனும் ஒற்றைச் சொல்லில்
இத்தனை நோயெதிர்ப்பு சக்திகளா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசிப்பதால் இரவைக் கடக்கிறேன்

தூக்கமிலா எங்கும் இரவுகளில் இனிக்கிறது
குழந்தைபோல் நீ தூங்கும் பெருங்காட்சி

உனது காட்சிகளில் காணாமல் போகிறது
வேதனை மீட்டும் எனது வீட்சி

பசித்தலையும் எந்தன் ஆத்மா
நீ உண்ணும் பாங்கில் ஆனந்திக்கிறது

நான் அவலப் படுகையில் அகப்பட்டிருக்கையிலெல்லாம்
உன்போல் குழந்தைத் தனங்களையெல்லாம்
உனக்குத் தெரியாமலே திருடித் தின்பேன்

ஆதலால் எனக்கேற்றாற் போல்
இரவாளைப் பகலவனாக்கியும்
பகலவனை இரவாளாக்கியும் வாழப் பழகிறேன்

வாஞ்சையான வாழ்க்கையை கற்றுத் தரும்
உந்தன் நினைவுக் கிணற்றில்
நான் தினந்தினம் நீச்சலடிப்பதால்
உன்மீதான எண்ணச் சிறகு என்னுள் முளையுண்டன

யாழ்ப்பாணத்தில் வெள்ளமென்றால் யாழ்ப்பாணத்துக்கும்
யாழ்ப்பாணத்தில் உள்ளமென்றால் செவ்வாய்க்கும் சென்று
மலர்கிறேன்

ஆதலால் தூக்கமிலா இரவைக் கரைத்து ஊக்க மருந்து ஊட்டு
பவளே
நீ மீட்டும் வீணையிலே நிலவொளி கேட்குதடி
நான் கூட்டும் எண்ணங்களில் வண்ணவானம் விரிகிறது

காலத்துக்கு கைகள் காட்டி
தூக்கவேள்ளி மீட்டிடுவோம்
தாக்கமிலா கணமதனை இனிதெனவே
எழுதிக் கடப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

எனது அதிகாரத்தை
எனது சர்வாதிகாரத்தை
எனது பிடிவாதத்தை
எனது திமிரை
கரைத்துப் பார்க்கும் உந்தன்
புத்தியை எனது வேட்கையால் வெட்டி வீசுகிறேன்

நான் என்மீது
என்னை அடக்கவும்
என்மீது என்னை ஆளவும்
என்மீது என்னை
அழகு பார்க்கவும்
என்மீது என்னைப் புகழவும்
என்மீது என்னில்
சர்வாதிகாரஞ் செலுத்தவும் முடியுமெனில்
அது பிழையுமில்லை
பயனற்றதுமில்லையென
நினைக்கிறேன்

அதுவே எனது சக்தியென யூகிக்கிறேன்

நீ நினைப்பது போலொரு பொம்மையாய்
நான் மாறுகையில்
அடிமைப்பானத்தையருந்தி
அன்பென்ற போதையில்
அழிந்துருகி பலவீனத் துட்டகைமுனுவாய் மாறலாம்

அல்லது சித்திராவாய் தொங்கலாம்
பின் சித்திராவில் சித்திரம் வரைந்து
இரையாகிப்போவதைப்போல்
நானுமாகலாம்
ஆதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை என்னாகவிடு
உன்னை உன்னாக வை
ஒரு போதும்
ஒருவன்
இன்னொருவனாக முடியாதென
நினைப்பவ னாகிறேன்

எனது நினைவில்
உன்னை நனைத்து
நல்லதுக்கு புள்ளி போடாதே

இந்த உலகில் நல்லவன் நல்லவள் பற்றி முழுப்பொழுதும்
கதைப்பது ஒரு
பயித்தியத்தனம்

ஏனெனில்

நல்லதைவிட
வல்லது அழகியது

குறிப்பு
துட்டகைமுனு என்பவன் தனது தாய் விகாரமகா தேவியை கேடயமாகக் வைத்து ஒழுக்கசீலனான எல்லாள மன்னனை போரொழுக்க முறையை மீறி வென்ற ஒருவன். ஈழத்து தமிழ்மக்களை கொன்று போரை வென்றது போல்

கொலையா தற்கொலையா என்றறியாது ஊடகங்கள் சித்திரங் கீறி வியாபாரம் செய்யுமளவுக்கு இறந்தவரே சித்திரா அவரின் பிரபல்யத்துக்கு எப்படி இந்த தொலைக்காட்சி நாடகங்களுக்கு அடிமையான சமூகம் காரணமோ அவரின் சாவுக்கும் காரணம் இதே சமூகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கா விழி வேதம்

உனதுமௌன அரங்கில்
ஆடலாகிறேன்
எங்கோ மௌனியாகித் தூங்கும்
உந்தன்உறக்கத்தை யெடுத்து
என்னுள் நிரப்பி
ஓராயிரம் சுகத்தை மூட்டுகிறேன்

எனது அறிவில் கொஞ்சம் தாவென
நீ வியக்கையில்
உனது உறக்கத்தில் பாதியாகி
இட்டு நிரப்புகிறேன்
இன்பத்துக்கான இடைவெளிகளை

நீ தூங்கும் அம்மணத்தையும்
ஆடைத்தனத்தையும்
ஒரு குழந்தைத்தனமாய்க் கிள்ளி
தூக்கம் செய்கிறேன்
அது வருவதாயில்லை

இப்போது
என் முன்னே
வீதியின் கண்ணே
தூங்கும் ஒரு பிச்சைக்காரன் பணக்காரனாய்த் தெரிகிறான்

நான் நினைவுகளைப் பிய்த்து
எறிந்து கொண்டிருக்கிறேன்
பணக்காரனாக முடியவில்லை

மெஞ்ஞானியாகிறேன்
எழுதுகிறேன்
அதிகம் படிக்காதீர்கள்
படுக்கையிடம் பிச்சை கேட்காதீர்களென
ஏனெனில்
தூக்கமும் ஒரு பணம்
தூக்கமும் ஒரு வெற்றி
தூக்கமும் ஒரு மருந்து
தூக்கமும் ஒரு கொடை
தூக்கமும் ஒரு நிரப்பியென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்மல வழி

நள்ளிரவு குழந்தைகளை பயமுறுத்துவது போல்
இருட் கிழவி சூரியனை
விழுங்குவது போல்
மதுக் கிண்ணத்தோன்
மந்திர முரைப்பது போல்
முறையற்ற உபாத்தியாயன்
ஆலோசனை அரைப்பது போல்
ஒப்பனை அப்பிய அரக்கத்தின்
அரசன் போல்
நடமாடும் நரரிடை தள்ளி நில்

முற்றுந் துறந்த முனியிடை
பற்றும் காமமும்
சுற்றம் கொற்றம் தரிக்கினும்
பற்றும் தோல்வியை
இற்றும் எருவில்
பூக்கும் மலர்களும்
தினமும் நிகழும் வழமைபோல்
ஆதலால்

சித்தங் கலங்காமல்
முறையற்ற சித்திரமாகாமல்
நித்திரையில் நடிக்காமல்
நித்தியத்தை மறக்காமல்
செய்கிறது இயற்கை

ஏனெனில்
கொட்டும் சொற்களை நட்டு
இட்டுவைத்து பட்டுப்பூச்சியின்

பரிநாமமாக்குகிறது மனிதனை
இப்போதெல்லாம்
சிலர் புழுக்களாய்
சிலர் பட்டாம்பூச்சிகளாய் தெரிகின்றனர்
எல்லாம் அவரவர் சொற்களைப் பொறுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனக் கண்ணாடி

மௌனமும் ஒரு பிரார்த்தனையென
சொல்லிச் செல்கிறது காலம்
வெறு வானத்தையும்
விரிந்த கடலையும் போல்
மௌனமும் மகா ரம்மியமானது

சலனங்களை சரிக்கவும்
சரசங்களை சரிக்கட்டவும்
நசைச் சர்ப்பங்களைத் தூங்கச் செய்யவும் மௌனம்
மருந்தாகிப் பயக்கிறது

ஓரிரா வேளை மணி ஒன்பதில்
படலையுள் நுழைந்தேன் வீடு விரிய
என் வீட்டு நாயென்னில்
மௌனித்து வருட நினைப்பினில்
விரிந்தது நாயின் பசிக்குடல்

பிறகு எந்தன் நாய்மீட்டும் நினைப்பில்
பல காதம் பெயர்ந்தேன்
அதன் உணவுக்காய்

மணி பத்துக் கலைய
கடைக்காரன் கேட்டான்
ஒரு நாய்க்காக இவளவு தூரம்
இரவேகி வருவதேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மௌனங் கலைய
சொற்களை வீசினேன்

எனது இருப்பிடத்தில்
அவளோ அவனோ இருந்திருந்தால்
சாப்பாட்டைக் கேட்டிப்பாள்
பிறகு கூப்பாடு போட்டிருப்பாள்
பிறகு நீ என்னில் கொண்டது அன்பா என்பா என
ஆராட்சிகளை யாத்திருப்பாள்
அடுக்கு மொழிகளால் அணு குண்டு அடித்திருப்பாள்
படுக்க விடாமல் பல வதை தைத்திடுவாள்
உறவின் பாலத்தின் நீளமென்ன
நமது காதலின் நிறை என்னவென
வீட்டையே விண்வெளிக்கு அனுப்பியிருப்பாள்

ஆனால் அதுவேனோ
வாயில்லா வம்சம்
அதுவென்னில் தஞ்சம்
அதன் மௌனம் மகா நெஞ்சம்
அதனால் உம்கடை தஞ்சமென்றேன்

கடைக்காரன் ஏளனித்தான்
கடைக் கண்ணாடி சிதறின
நான் அறமேகிப் புரண்டேன்

மாலை 6.27
23.02.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்மை

உனது சலசலப்புகளில்
நான் சாணக்கியனாகிறேன்
உனது எனும் சொல்லின் பொருளை
தோழன் தினமும் கேட்கிறான்

உனது என ஓர் ஆண் சொல்லில்
அதற்குள் ஒரு பெண்
சக்காளத்தியோ பரத்தையோ
தெய்வமோ தேவதையோ ஆகுமென
அவன் மறக்கிறான் போலே

பெண்ணில்லா மண் விண்ணாகுமா
விண் மண்ணாகுமா

நீ என்னைச் செதுக்கும்
பிரம்மாவாகி
எனக்குள்ளொரு பிரளயத்தை யாக்கிறாய்

நீ முற்றம் பெருக்கவும்
முழு ஆடை துவைக்கவும்
பாய் விரிக்கவும்
பாயாக ஆகவும்
தலை அணை போடவும்
தலை அணை ஆகவும்
தேனீருற்றவும்
அபரிமிதமான சக்தியாகிறாய்
அங்கே தோற்கிறான்
ஆணென்ற பலசாலி

ஆனாலும் எனக்குள் ஒரு இருதயமுண்டு என
நிறுவிச் செல்லும்
கணிதமுமாகிறாள் ஆணென்ற வினோத பலசாலி

அம்மாளைப் பார்க்கவும்
அண்ணியைப் பார்க்கவும் பெண்மையைப் பற்றி
பேதமையாகிறேன

ஏனெனில்
பெண்மையென்பது ஆண்மைக்கு நிகரான அழகிய ஆழ்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்புக்கள்

**செல்வா ? கவிதையும் காலமும்**

ஈழத்துக் கவிதைகளின் பயணத்தில் நாமும் ஒரு பயணியாக செல்லும் ஒரு வாய்ப்பை கவிதை எங்களுக்கு தந்துவிட்டதா இல்லையா என்ற விடை எம்மிடம் உட்கார்ந்து விளையாடும் பாக்கியத்தை பெற்ற குறும்புத்தனமான குழந்தைகளாக நாம் இருக்கின்றோம் என்பதில் மகிழ்ச்சி. கவிதையில் எல்லையிடப்படாத எல்லைகளை யார் தொட்டுச் சென்றார் யார் தொடுகின்றார் என்ற ஆழமான தேடலும் சிலாகிப்பும் இருந்து கொண்டே செல்லும் தருணத்தில் நட்சத்திரங்கள் கோடியைப் பார்த்த கண்களை சில வேளைகளில் மின்னல்கள் திரும்பிப் பார்க்க வைத்து ஆச்சர்யங்களை பரப்பி விடுகின்றன. ஆழமான கவிதைகளோடு பழகிடும் வாய்ப்பு உலகில் அரிதாகவே கிடைத்தாலும் காலம் அவ்வப்போது அந்த மனக்குறையைத் தீர்க்க திருவுளங் கொண்டு விடுகின்றது. பாரதிக்குப் பின்பு பாரதிதாசன் தோன்ற வேண்டுமென்ற அவசியமேதுமில்லை. அத்திவாரங்களில் எழுதப்பட்ட அழகிய மாளிகையின் மாடங்களில் படர்ந்திருக்கும் கொடிகள் கூட ஒரு இரகசியத்தின் முகவரியின் எழுத்துக்கள் ஆகிவிடலாம். காற்றின் தீராத பக்கங்களில் பறவையின் வாழ்வை எழுதிச் செல்லும் பிரமிளின் சிறகைப் போல வல்லவனாய் பிறக்கத் துடிக்கும் பிரசவ வலிகளின் முனகல்கள் தீர்ந்துவிடவில்லை. எது கவிதை என வினாத் தொடுக்கப் போவதுமில்லை. எதுவும் கவிதையென முடித்து வைக்கப் போவதுமில்லை தேடலை.

ஈழத்துக் கவிதைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அவஸ்தைகள் ஊடாகவே பயணம் செய்கின்றது. பிறர் சொல்வது போல அநேகமாக இருண்ட காலத்தின் பாடல்களாகவே பிறந்திருக்கின்றன. இருண்ட காலத்தின் பிரகாசம் நிறைந்த படைப்புக்கள் அவதரிக்கின்றன. மானுட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவஸ்தையின் இன்னொரு காலத்தின் வடிவமாகவே எழுந்திருக்கின்றன. அவை முன்னும் எழுந்திருக்கின்றன.

இயேசுவை சிலுவையில் அறையும் போதும் நாயன்மார்களைச் சுண்ணாம்பு அறைக்குள் அடைத்துக் கல்லோடு கட்டி கடலுள் வீசும் போதும் சேகுவேரா சுடப்படும் போதும் யூதர்கள் நாடற்று அலையும் போதும் ஒரு சிறிய குழந்தையின் பிணம் ஏதோ ஒரு கடலின் கரையில் அநாதையாய் ஒதுங்கும் போதும் நந்திக்கடலில் பிணங்கள் குவிந்திருக்கும் போதும் அந்த மானுட அவஸ்தையின் மீதான அந்தப் பாடல்கள் எழாமல் இருக்க வாய்ப்பே இல்லை. மானுட உணர்ச்சிகளில் இருந்து தீரா நதியாய் ஓடிக்கொண்டிருக்கிறது கவிதை உணர்ச்சி. கவிதை ஒரு உணர்ச்சி அது எல்லோருக்கும் வாய்த்து விடாது என்பது தான் உண்மை. அது வாய்க்கப் பெற்றவர்களின் எழுத்துக்கள் எங்களை வசியம் செய்கின்றன. அத்தகைய வசியங்களின் பொறி செல்வா என்ற இந்த கவிஞனுள்ளும் சூல் கொண்டு பிறந்து கொள்கின்றன.

மானுட உணர்ச்சியும் அரசியல் உணர்ச்சியும் சமூகப் பொறுப்பும் கற்பனையும் செல்வாவின் கவிதைகளுள் பயணம் செய்கின்றன. இவர் ஒரு போரின் குழந்தை. முன்பு நான் குறித்தது போல மானுட அவஸ்தையை இவர் சுமந்திருக்கிறார். வாழவிடப்படாத மனிதர்களின் வாழ்க்கையை செல்வா தன் பாடுபொருளாக தேர்வு செய்கிறார் என்பதை விட அவரின் மனங்களில் அவை போர் புரிகின்றன. ஏக்கங்களை விதைக்கின்றன. வீழ்தலில் இருந்து எழும் அடங்காப்பறவையை அவர் படைக்கிறார். அது எப்படி அடங்கும் என எங்களை அவர் கேட்கின்றார். அடங்கும் படி செய்தவை மீது அவர் கோபப்படுகின்றார். பறவையொன்றுக்கு இருந்த வாழ்வின் அழகை வீழ்தலில் இருக்கும் துயரத்தில் பரவமுனைகின்றார். இந்த பூமியின் வேறொரு மானுடனில் மீளும் தனது வாழ்வு கண்டு மகிழும் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளுக்குள் இழையாகி விடுகின்றது. காலனித்துவமும் அதில் இருந்து விடுபடுதலுக்கான புரட்சிகர சிந்தனைகளும் இன்றுவரை அகல்வதாக இல்லை.

கடந்த நூற்றாண்டுகளில் இருந்து விடுதலைக்கான புரட்சியும் போராட்டங்களும் மானுடப்பிறப்பின் வாழ்வை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. எழுத்துக்களையும் கூட அவை ஆக்கிரமித்துள்ளன. அவஸ்தைகளாக புகுந்த மானுடம் தேடுகின்ற சுதந்திர உணர்ச்சியின் வெளிப்பாடுகள் புரட்சிகளாக போராட்டங்களாக தியாகங்களாக மாறிவிட்டிருக்கின்றன. போருணர்ச்சியும் இனவுணர்ச்சியும் மானுட வாழ்வின் வேறொரு உணர்ச்சியுள் முதலிடப்பட வேண்டிய தருணத்தில் மனித மனங்களுக்கிடையிலான முரண்பட்ட மனப்பாங்கு வேறொரு தருணத்தை படைத்திருக்கின்றன. அவை எழுத்துக்களின் பாடுபொருள்களாகவும் அந்த எழுத்துக்கள் தியாகத்துக்கான புரட்சிக்கான போருக்கான மானுட உருப்படிகளை உருவாக்கும் வழிகளாகவும் மாறிவிட்டிருந்தன. இத்தகைய மானுட வாழ்வின் அக உணர்ச்சிகளுக்கும் இடையிலான போராகவும் இன்றைய கவிதைகள் பிறக்க விளைகின்றன. செல்வாவின் மீதும் அத்தகைய உணர்ச்சிகள் ஆளுமை செலுத்துகின்றன.

**களைப்பின் முதிர்வில்**
**சலித்துப் போகிறேன்**
**ஆனாலும்**
**இன்று வரை தேடுகின்றேன்**
**எனக்கான ஒரு வெற்றுப் பக்கம்**

வைத்திருப்பாய் என்ற தவிப்பில் என்கின்ற கவிஞர் செல்வாவின் உணர்ச்சி

**உன் உதடுகளில் ஒட்டிய**
**உரிமைக்கீதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இக்கணமும் என்னை வசீகரிக்கின்றது**
**ஆயிரம் பாடுகளை உடைத்தெறிந்த**
**அந்தரத்தின் ஆனந்தமாய்ப் பறக்கும்**
**உனது உதடுகளுக்கு**

எனது முத்தங்களை அனுப்பத் தலைப்படுகின்றேன் எனும் குர்திஸ் முத்தக்கடிதம் தனது பார்வையின் பக்கங்களின் வியாபகத்தைக் காட்ட விளைகிறது. எதையும் துணிச்சலுடன் பாடுபொருளாக்கும் பக்குவம் வீரியமான கவிஞனுக்கு உரிய பலம் அந்த விதை செல்வாவுக்குள்ளும் முளைத்தெழுகின்றது. அவரது எழுத்துக்கள் தேடலை, உலகலாவிய பார்வையை, இயல்பான மனித உணர்ச்சிக்கான வடிகால்களை, அவர் சந்திக்கும் மனிதர்கள் அவர் தம் உணர்ச்சிகள், சமூகம் சமூகத்தின் இயங்குநிலை, அவர் மீதான கோபம் என மானுட சமுதாயத்தின் உணர்ச்சிக்குள் பயணம் செய்கிறார் கவிஞர் செல்வா. செல்வா எனது நண்பர் அவருக்குள் இருக்கும் உணர்வுகளை எழுத்திலும் பேச்சிலும் வெளிக்கொண்டு வரும் ஆற்றல் அவருக்குண்டு. பாடுகளை கடந்து செல்லும் பக்குவம். வாழ்க்கையின் யதார்த்த நிலைகள் பற்றிய தெளிவு அவரிடம் கண்டுள்ளேன். அவரது கவிதை தொகுதி கவிதை உலகுக்கான ஈழத்தமிழனின் பங்களிப்பைச் செய்யும்.

இலக்கணத்தை எழுதுவோம்
இனியும் இருப்போமென
என்ன உத்தரவாதம்
அக்கணம் அவனிடம்
இக்கணம் எம்மிடம்

நன்றி
கவிஞர் பொன்காந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வாவின் கவிதைகளில் சட்டம் மற்றும் தற்காப்பு கோட்பாடுகள்

கவிஞர் தவராசா செல்வாவின் கவிதைகள் வாசிக்கக் கிடைத்தன. இக் கவிதைகள் குறித்த எனது புரிதலும் புரிதலுக்கான யதார்த்தங்கள் குறித்தும் எனது முன்னுரை அமைய வேண்டும் என நான் விரும்புகிறேன். ஏனென்றால் காலத்தின் அல்லது காலப்பிரளயத்தின் தவிர்க்க முடியாத மனச்சாட்சியின் குரலாக எழுதப்படும் ஒரு சிறிய படைப்புகளுள் செல்வாவின் படைப்பு கனதியான தொடுசான்றாக இருப்பதாக நான் உணர்கிறேன். கவிதை இலக்கியப் படைப்பு ஒன்றை வெளியிடும் செல்வாவின் நீண்டகால கனவு கைகூடி வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் இந்தக் கனவின் மீது அதிக கேள்விகளை எழுப்பிய மனிதனாக நான் இருக்க முடியும் என நம்புகிறேன். செல்வாவின் இந்தக் கவிதைகள் கிட்டத்தட்ட எட்டு மாதங்களுக்கு முன்பே என்னிடம் சேர்ப்பிக்கப்பட்டிருந்தன. நான் நீண்ட தாமதத்தை கடைப்பிடித்திருந்தேன். ஒரு இலக்கியப்படைப்பு என்பது படைப்பாளிக்கு ஒரு தோற்றத்தையும் படைப்பாளி அல்லது பார்வையாளன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தோற்றத்தையும் கொடுக்க வல்லது. ஒரே பார்வையாளனுக்குக்கூட ஒவ்வொரு பார்வை நேரங்களிலும் ஒவ்வொரு அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியது. விசேடமாக இந்த பண்பை நாம் நாடகங்களில் காணலாம். செல்வா ஒரு நாடகக்காரன் ஒரே மேடையில் ஒரே காட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட நிதர்சனங்களையும் புரிதல்களையும் நிகழ்த்தக்கூடிய நாடகக்கலையின் புரட்சிகர இயங்குநிலையை நாம் செல்வாவின் கவிதைகளில் காணலாம். செல்வாவின் கவிதைகளில் மீந்து நிற்கக்கூடிய இலக்கியப் பங்களிப்பாக புரட்சிகர பங்களிப்பாக நான் இந்தப்பண்பை காண்கிறேன்.

செல்வாவின் கவிதைகளின் காலம் அதிக கவனிப்புக்குரியது. புறநானூறு கண்ட தமிழிலக்கியப் பரப்பில் போருக்காகப் பாடப்பெற்ற கவிதைகள் அல்லது இலக்கியங்கள் அதிக ஆளுமையைக் கொண்டிருக்கின்றன. அன்று தொட்டு இன்று வரை காதலும் வீரமும் எங்கள் கவிகளையும் படைப்பாளிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் ஈர்த்து வருவன. அதிலும் போரும் வீரமும் தமிழர்களின் இயல்பூக்க நடத்தையாகவே இலக்கியங்கள் தோறும் பரவிக்கிடக்கின்றன. ஈழத்துக்காதலும் ஈழத்துப்போரும் உலகமறிந்த விடையங்கள். வடஇலங்கை, கிழக்கிலங்கை பாரம்பரியங்கள் ஈழத்தின் போர் மீதும் ஈழத்துக்காதல் மீதும் வெளியாரிடையே எதிர்பார்ப்பைத் தோற்றுவிக்கும் விடயம் எனலாம். செங்கைஆழியானின் "கிடுகுவேலி" பேசியிருக்கும் ஈழத்துக்காதலையும் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் போரும் சமாதானமும் பேசியிருக்கும் போரையும் பார்த்தவர்கள் நாம். இதைவிட எண்ணற்ற உலகலாவிய படைப்பாளிகளும், ஈழத்துப்படைப்பாளிகளும், போராளிப்படைப்பாளிகளும், போர்வீரர்களும் பதிவு செய்த போரிலக்கியங்களையும் பார்த்தவர்கள் நாம். "தேசங்களின் வழமை" என்று குறிப்பிடப்படுகின்ற போர்களால் உருவாக்கப்பட்ட அரசியல், பண்பாட்டு சமூக எல்லைகள், வரையறைகள் உருவாக்கிய "தேச வழமை" அல்லது தேசத்தின் கடந்த காலத்தை தமிழ்ச்சமூகம் பெரும்பாலும் அங்கீகரிக்கத் தாமதித்து தயக்கம் காட்டுதல் மீது நிகழும் நியாயமான கோபத்தின் வெளிப்பாடாக, நீதி கேட்கும் குரலாக கொப்பளிக்கின்றன செல்வாவின் கவிதைகள்.

போருக்குப் பின்னரான காலத்தில் **(Pust Conflict Scenario)** எமது சமூகங்களின் ஓட்டமும் அதன் இருப்பும் குறித்த இயங்கியல் வினாக்களை செல்வாவின் கவிதைகள் எழுப்புகின்றன. ஒரு மாபெரும் இன ஒழிப்புப் போர் நடந்த தேசத்தில் இனவழிப்புக்கு எதிராக பெரும் தற்காப்பு யுத்தத்தை நடத்திய மக்கள் சமூகம் ஒன்றின் விருப்புகள் வெறுப்புகளுக்கு அப்பால் நிகழ்ந்தேறிவரும் சமூக மாற்றங்கள் இப்படைப்பாளிக்கு கவலையை ஏற்படுத்துவனவாக தென்படுகின்றன. போருக்குப்பிந்திய காலமொன்றில் தோற்றுப்போனதாக வலிந்து கருத்துவமிக்கப்பட்ட (Forced illustrativedeclaration) மக்கள் குழுமத்தின் மீதான சமூக பொருளாதார பண்பாட்டியல் நெருக்குதல்கள் குறித்து இக் கவிதைகள் பேசுகின்றன. போருக்குப்பின்னர் நலிந்து போனவர்களாக கருதப்படும் சமூக உறுப்பினர்கள் அல்லது "நலிந்து போனவர்கள்" என்கிற கட்டாய கருத்துருவாக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் பழிவாங்கப்படும் அல்லது புறக்கணிக்கப்படும் சமூக உறுப்பினர்களின் உளவுரனை கட்டியெழுப்புவதற்கு செல்வாவின் கவிதைகள் பெரும் பங்களிப்பை செய்கின்றன. நீண்ட காலமாக ஒரு "மூடிய தொகுதி" பண்பாட்டு சமூக சூழலில் நாம் பாதுகாத்த சமூக அடையாளங்களையும் பெருமிதங்களையும் போருக்குப்பின்னரான காலத்தில் நாம் உதாசீனம் செய்கிற அல்லது கவனிக்காமல் விடுகிற மேற்தட்டு சமூகத்தின் போக்கின் மீதான சாட்டையடியாக செல்வாவின் படைப்புக்கள் இருக்கின்றன. போரில் நேரடியாக தொடர்புபட்டும் தொடர்புபடாமலும் பாதிக்கப்பட்டிருக்கின்ற தனிநபர்களது "உளக்காயத்தை" ஆற்றும் மருந்தாகவும் "பேசாப்பொருட்கள்" பேசப்படும் போது கிடைக்கக்கூடிய ஆசுவாசமும் ஆறுதலுமாக இக்கவிதைகள் இருக்கின்றன. நீண்ட போரின் பின்னர் தொலைதூரக்கிராமம் ஒன்றில் மறுக்கப்பட்டவனாக தனித்திருக்கும் போர்வீரனின் அனாதையான ஏழ்மையான வாழ்வில் அவனது மனவோட்டத்தை அடிக்கடி சிதைத்துக்கொண்டிருக்கும் தனித்துவிடப்பட்ட கேட்பாரற்ற வாழ்வின் கணங்களை யோசித்துப்பாருங்கள். அந்தக்கணங்களில் அந்தப் போர்வீரன் தனித்து இருக்கும் போது அவனது போர் நியாயமற்றது என்றும் பயனற்று தோற்றுப்போனது என்றும் யாராவது அவனுக்கு அடிக்கடி தந்தி அனுப்பிக்கொண்டிருந்தால் எப்படி இருக்கும். இந்த வேளையில் அவன் தன் அவயவங்களை இழந்திருப்பானாகின் அவனது மனச்சிதைவின் பரிமாணம் எப்படி இருக்கும். மாபெரும் ரஸ்ய எழுத்தாளர் 'அன்ரன் செக்கோ'வின் "சலிப்பு" எனும் சிறுகதையில் இடம்பெறும் குதிரைக்கார கிழவனைப்போல நாம் எமது முன்னாள் போர்வீரர்களைக் காண்கிறோம். அவர்கள் இறந்து போகும் செய்தி நாள்தோறும் எம்மை வந்தடைகின்றன. சலிப்படைந்த குதிரைக்கார கிழவனது மனோநிலையைப்பாடி ஆறுதலளிப்பவையாக செல்வாவின் கவிதைகள் வருகின்றன.

2009 இற்கு முன்னர் ஈழத்து இலக்கிய வெளியில் தமிழ் மக்களது தேசிய அடையாளச் சிந்தனையின் தற்காப்பு நியாயப்பாடுகளை ஆதரித்துப் பேசும் இலக்கியப்படைப்பொன்றின் வகிபாகம் போல தமிழர்களது போரின் பின்னடைவிற்குப் பின்னரும் மாறாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரியத்தோடு வரும் செல்வாவின் கவிதைகள் அவரை ஒரு "அடங்காப்பறவையாக" அடையாளம் காட்டுகின்றது.
செல்வா இந்தக் கவிதைகளுக்கூடாக ஆதரித்து வரும் நியாயப்பாடுகள் தமிழர்களது பிறப்புரியாக இருக்கும். சுதந்திர வேட்கையின் மீதான தணியாத தாகமாக பரிணமிக்கிறது. அன்றியும் தற்காப்பு போரியல் உரிமையின் நியாயாதிக்கத்தை பறைசாற்றி நிற்கிறது. போருக்கு முன்னர் தம்மை மாபெரும் கவிகள் எனவும் படைப்பாளிகள் எனவும் பறைசாற்றியோர் போருக்குப்பின் நிலை தளர்ந்து நெறி பிறழ்ந்து பலமான அலையின் பக்கம் சாயும் நாணல்களாகி அடிமைப்படுத்த விழைவோரின் பக்கம் சாய்ந்து இயற்கையான நியாயங்களுக்கும் நியதிகளுக்கும் துரோகமிழைத்து எழுதிவரும் இந்தச்சூழலில் செல்வா தனது கவிதைகளுக்கூடாக பிரமாண்டமான ஆளுமையாக தனித்துத் தெரிகிறார்.
செல்வாவின் காதல் கவிதைகள், வெளிப்படுத்தாத நெஞ்சங்களின் விம்மல்களாகவும் காதலுணர்வுக்கு ஆட்பட்டு தலைவியின் இனிய நறுமணம் வீசும் ஞாபகங்களால் அலைக்கழிக்கப்படும் தலைவனின் இருப்புக்கொள்ளாத உணர்வின் வழித்தடமாகவும் வெப்பியாரமாகவும் தெறிக்கின்றன. செல்வா தனது கவிதைகளில் அதிக உருவகங்களையும் உவமான உவமேயங்களையும் பயன்படுத்தவில்லையாகினும் எளிமையான வீச்சான சொல்லாடல்களுக்குள்ளால் வலி அல்லது உய்த்துணர் துயரத்தின் பரிமாணங்களை விளக்க முயன்றுள்ளார். செல்வாவின் கவிதைகளை படிக்கும் போதெல்லாம் எனக்கு ஏற்படும் உணர்வு அகராதியின் எல்லா மூலைகளில் இருந்தும் ஏதாவதொரு சொல் அவரது கவிதைகளில் இருக்கும். நெருப்புத்தணல்களின் மீது இடப்பட்ட குங்குலியம் புகையாக காற்றில் எழுந்து எழுந்தமானமாக எல்லா திசைகளிலும் பரவி நறுமணம் பரவுவது போல இருப்பது இந்தக் கவிதை இயக்கம்.
வாழ்த்துகள் செல்வா
கவிதைகளுக்கான பயணம் தொடரட்டும்
கவிஞர் ஜெகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டில் படித்துக்கொண்டிருந்தபோது அக்காலத்தில் மாணவர் ஒன்றியச் செயலாளராக முள்வேலி முகாம்களில் இருந்து வெளியில் எடுக்கப்பட்ட மாணவர்களில் ஒருவராக செல்வாவைப் பார்த்தேன். ஆனாலும் கிளிநொச்சி தன் இளைஞர்களையே இழந்து போயிருந்த ஒரு காலத்தில் கிளிநொச்சி நகரில் செல்வாவை சந்தித்து உரையாடினேன். மிகவும் முக்கிய தருணம். ஒரு நீண்ட கவிதையின் தொடக்க கணங்களைப்போல இப்போதும் இருக்கிறது. போர் முடிவடைந்து கிளிநொச்சிக்கு மீண்ட போது மீண்டவர்கள் சிலர் தான். பலர் போரில் கொல்லப்பட்டு விட்டனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டு விட்டனர். இன்னும் சேதி அறியாதவர்கள் எவர் எவரோ. அப்படியான பொழுதுகளில் தான் செல்வாவைப் பார்த்தேன். போரின் கொடூரக் கரங்கள் கிழித்தெறிந்த வாழ்வில் உழன்ற சொற்கள் இவருடையவை. இந்தக்கவிதைகள் பெரும்பாலானவற்றை முதலில் அத்தகைய சொற்களாகவே கேட்டிருக்கிறேன். போரும் இழப்பும் போரின் கதைகளையும் தவிர எம்மிடம் பேச ஏதும் இருக்கவில்லை.

எம்முடைய அடுத்த தலைமுறைகளின் குரலும் இப்படி ஆகிவிடுகிறதே என்பது நெஞ்சை அழுத்தும் துயரமாக இருந்தாலும், நாம் சரிந்துவிடவில்லை. நாம் தோற்றுவிடவில்லை என்பதை இப்போரை கடந்த புதிய தலைமுறை பேசுவது மிகுந்த நம்பிக்கையானதல்லவா? செல்வாவின் கவிதைகள் அப்படியானதொரு நம்பிக்கையின் பாற்பட்டவை. குரலற்ற இனமாக இவர்கள் அழிந்துபோய் விடுவார்கள் என்று சிங்கள மேலாதிக்கம் எமது எதிர்காலத்தை எழுதியது. இறந்தகாலத்தை ஆயுதமாக தூக்கிய போருக்கு பிந்திய ஈழ எழுத்தாளர்களில் ஒருவர் தான் செல்வா.

போருக்குப் பிறகொரு போரை நாம் சந்தித்தோம். எங்களில் சில கவிஞர்கள் வெள்ளிக்காசுக்குப் பலியாகினர். எங்களில் பல கவிஞர்கள் குரலற்றவர்களாக பேச முடியாத அறைகளுக்குள் முடக்கப்பட்டனர். வென்றவர்கள் எங்கள் வெள்ளிக்காசுக் கவிஞர்களை வைத்துக்கொண்டே தங்கள் வரலாற்றை எழுதினர். எங்கள் சினத்தை, எங்கள் கண்ணீரை புதைத்தனர். பளபளக்கும் பொன்னிற ஆடைகளிற்கும் அங்கீகாரத்திற்கும் அரசு மரியாதைக்கும் செத்துப் போன அவர்களின் முன்னால் எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறை நலிந்து போன தம் கரங்களால் காவியங்களை எழுதினர்.

இந்தக்கால கட்டத்தில் ஈழத்தில் போர்க்களத்தில் படைப்புப் போராளிகளாக நின்றவர்களும் பின்போர் காலத்தில் தம் கைகளில் பேனாவை எடுத்தனர். அப்படி எழுதத் தொடங்கிய இளைய தலைமுறையை சேர்ந்தவர் செல்வா. இந்தக் கவிதைகளை நீங்கள் அவ்வளவு எளிதில் புறந்தள்ள முடியாது. இந்தக் கவிதைகள் இந்த மண் பயணிகளின் கோபம். இந்தக் கவிதைகள் இந்தத் தலைமுறையினரின் கோபம். கபடமற்ற நெஞ்சங்களில் எழுந்த கேள்விகள் இவை.

போரின் கதைகளையே செல்வா பேசியபடி இருப்பான் இன்றைய தலைமுறையினரின் குரலே இதுவாகிவிட்டது. 90 களில் பிறந்தவர்களின் கவிதைகளும் இதுவே. 2000 ஆண்டுகளில் பிறந்தவர்களின் உரையாடல்களும் இதுவாகவே இருக்கின்றது. நாம் சந்தித்தது மாபெரும் இன ஒழிப்புப் போர். இன்றைய அதி நவீன யுகத்தில் நாம் தினம் சந்தித்த இந்தக் கடுமையான போரைக் குறித்து இந்த மண்ணின் தலைமுறைகள் அதிகமும் பதிவுசெய்ய வேண்டியிருக்கிறது. ஆக்கிரமித்தாளும் அரசின் புனைவுகளையும் அதன் பின்னால் உள்ள இன அழிப்பு சூத்திரத்தையும் அவிழ்க்க வேண்டும். அதற்கு எழுத்தை ஆயுதமாக ஏந்த இயலும்.

செல்வா இவ் இன அழிப்புப் போரின் சாட்சி. அவனுடைய கவிதைகள் எளிமையான சொற்களினால் ஆனவை. ஒரு குழந்தையைப் போல வெளிப்படையாகவும் மனசாட்சியை உலுப்பும் விதமாகவும் எழுந்திருப்பவை. இந்தக் கவிதைகளில் அரசியல் இல்லை. இந்தக் கவிதைகளில் அங்கீகாரத்தின் அரசியல் இல்லை. இந்தக் கவிதைகளில் மேட்டிமைத்தனங்கள் இல்லை. இந்தக்கவிதைகளில் இருப்பவை எல்லாம் சனங்களும் அவர்களின் குரலுமே. இவற்றை மொழிபெயர்க்கவும் பொழிப்புரைக்கவும் யாரும் தேவை இல்லை. உலகின் முன் எம் பாடுகளை சொல்லும் எளிய பாடல்கள் இவை.

கவிஞர்
தீபச்செல்வன்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது அடங்காப்பறவையின் அழகியல் தருணம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய தடம் பதிக்கும் அடங்காப்பறவையின் அழகியல் அம்சங்களையே எழுத முனைகிறேன். கலைஞனால் உருவாக்கப்படும் படைப்பு சுவைஞனுக்குத் தரும் அனுபவே அழகியல் அனுபவமாகிறது. ஒரு வாசகியாக இத்தகு அழகியல் அனுபவத்தை, கலைத்துவம் மிக்க அம்சங்களை அடங்காப்பறவையை வாசிக்கும் ஒவ்வொரு தடவையும் உணர்ந்தேன். அடங்காப்பறவை இப்படைப்பு சிறகசைக்கும் இத் தருணம் இதன் ஒவ்வொரு அசைவும் ஏதோ ஒரு வியப்பூட்டும் நிகழ்வை, சம்பவத்தை, சமூகத்திற்குக் கொண்டு செல்லும் என்பது நிஜம்.

இனவிடுதலைப் போராட்டம், அதன் பின்னரான சமூக நிலவரங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், காதல், பிரிவு, வலி வேதனை, வன்முறை, சுதந்திரம், பெண்ணின் பேராற்றல், தாயின் தன்னிகரில்லா ஆளுமை, இயற்கையின் மீது கவிஞன் கொள்ளும் பேரவா, எனப் பல்வேறு பேசு பொருள்களைக் கொண்டு இக் கவிதைகள் படைப்பாக்கப்பட்டுள்ளது.

இனவிடுதலைப் போரின் வடுக்களை அப்படியே கவிதைகளில் படம் பிடித்துக்காட்டுகின்றார். போரின் கொடூரத்தை மனிதப்பேரவலத்தை இயல்பான யதார்த்த நடையில் தன்னுடைய கவிதைகளில் கொண்டுவருகின்றார்.

"எல்லையில்லா ஆக்கிரமிப்பு
பூதங்கள் நடுவே அறம் அசிங்கப்
பட்டு கிழித்தெறியப்படுகிறது ."

புதிய அர்த்தங்களைக் கற்பிக்கும் சொற்களைத் தேர்ந்தெடுத்து கவிதைக்கு ஒட்டுகின்றார் முத்தவயல், தங்கச்சுரங்கம், புள்ளின் உடல், குருதிஆயம், நினைவுக்கோமா இது போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களைத் தேர்ந்து கவிதைக்கு ஒட்டுதல் கவிதையின் அழகியலுக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

கவிதைத் தலைப்பும் பல கோணங்களில் அர்த்தத்தைத் தரவல்லது. மனித வாழ்வின் சிக்கல்கள் சுகதுக்கங்கள், வன்முறைகள் போன்றவற்றை எந்த வித முலாமும் பூசாமல் படைப்பாக்கும் கலையைப் பெற்ற கலைஞனுடைய கவிதைகள் இவை.

மழைவரும் போது நிலமங்கை அழகாகும் நேரத்தில் ஏழைகளின் குடிசைகளும், குளிரில் நடுங்கும் குழந்தையர் நிலையும் மனதை நிலைகுலையச்செய்யும் காட்சிகள் கூடவே மழை இதனை அறியாத்தன்மையால் மழையை கடிந்து கொள்கிறார்

"....ஓயாத காற்றுப் போல்
சாயாத இரவுகளைக் காணும்
குழந்தையர்
அங்குதான் நடுங்கிக் கொண்டிருப்பர் என்பதை!"

மனிதர்களின் மனநிலைகளைப் பல்வேறு விதமாக அடையாளப்படுத்துகின்றார். இவர் தனது எல்லாக் கவிதைகளையும் ஒரு மையத்தில் இருந்து தொடுப்பதற்காக நான், எனது என்ற சொல்லை தேர்ந்தெடுக்கின்றார். இவரது கவிதைகளில் வரும் நீ என்ற பாத்திரத்தின் மூலம் ஒரு பெண்ணின் ஆளுமையை திரட்டிக் கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றது.

"நீ எனதருகில் வருகையில் சக்தியேறுகிறது
சிவனுக்கு சக்தி போல் நீயுமாகலாம்...."

அடுத்து வரும் கவிதைகளில் வாழ்வியலின் அற்புத தத்துவார்த்தியாக மாறி நல்லது நல்லவன் என்பது எது என பெண்ணிடமே கேள்வி எழுப்புகிறார்.

"நல்லவனென்பது என்ன பெண்ணே
உன் நெஞ்சில் துஞ்சுவதா
உனது உதரத்தில் ஒரு பிஞ்சை விதைப்பதா....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு எனும் கவிதையில் ஆண் தாயாகி விளக்கேற்றும் அற்புதக்காட்சியில் ஆரம்பித்து, அந்த விளக்கு தனது உடன்பிறப்பை இழந்த வலியை நினைவுக்கு கொண்டு வந்ததாக முடிக்கிறார். இழப்பின் வலியை வேறொரு வகைப் படிமத்தில் தருகின்றார். ஒரு கவிதையில் பல சம்பவங்களைச் சொல்லிவிடும் கலையாளுமை இவருக்குரிய தனித்துவம் எனலாம்.

"....விளக்குக்கு எண்ணை விடுகையில்
ஒரு குழந்தைக்குப் பாலூட்டும்
ஆண் தாயாகிறேன்..."

கவிதை நிகழும் அழகியல் தருணத்தை எதிர்கொள்ளும் விதம் வியப்பூட்டுகிறது கவிதையை முடிக்கும் கணத்தில் அடுத்த கவிதையை வாசிக்கத்தூண்டும் ஆர்வத்தையும், வாழ்வின் மீதான நம்பிக்கையையையும் ஊட்டிவிடுகின்றார்.

" நிச்சயம் நேரம் எனக்கொரு
நேரமாகுமென"
" நாம் நதியாவோம் கதியிழக்கினும் "

சொல்லியதற்கும் சொல்லப்படாததற்கும் இடையில் வாசகன் புரிந்து கொள்வதற்கான தோதான இடைவெளியை உருவாக்குகிறார்.

" உன்னை யாரென்று கேட்பவர்களால்
உனக்கு உயிர் வரத்தான் போகிறது
ஒரு............போல"

இவரது கவிதைகள் தனிமனித அனுபவம், சமூக அனுபவம், குடும்ப அனுபவம் போன்றவற்றினூடாகக் கட்டமைக்கப்படுகின்றது. குறிப்பால் பொருளுணர்த்தும் கவிதைகளும் அதிகம் காணப்படுகின்றன.

"போன பொம்மைகளைப்
பார்த்துப்
போகாப் பொம்மைகள்
காலப்பாடல்களைக் கற்றுக்
கொள்ள வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என பொம்மைகளின் உலகத்தைக் கண் முன் கொண்டு வரும் கவிஞர் அடுத்து,

"வற்றிய பாலையில் நீரூற்றைத்
தேடும்
இவர்களின் வலியும்
மானுடத்தின் ஓர் சாபம்"

எனக் குறி மீட்டும் நரர் கவிதையில் சமூகத்தில் நிலவும் விதி முறைகள், சம்பிரதாயங்கள் போன்றவை குறித்துக் கேள்வி எழுப்புகிறார்.

அடங்காப்பறவையை வாசிக்கும் போது இதனை எந்த வரையறைகளுக்குள்ளும் வகைப்படுத்த முடியாது எனவே எண்ணுகிறேன். ஒரு கவிதை அரசியல் பேசும், ஒரு கவிதை வெறுமை பேசும், ஒரு கவிதை காதல் பேசும், ஒரு கவிதை வன்முறை பேசும், சில கவிகள் பிரிவு சில பிரிவின் வலி எனப் பல வடிவங்களைக் கொண்டு பல்வேறு தளத்தில் பரிணமிக்கின்றன.

பல துறைகளில் ஆர்வம் உள்ள இவரது படைப்பாளுமை ஈழத்துக் கலை இலக்கிய வரலாற்றில் தனக்கான தனியிடத்தைப் பெறும். ஒரு அரங்கில் படிக்கப்பட்டால் பல இலட்சம் பேரைச் சென்றடையக்கூடிய கவிதைகள் இவருடையவை. இனிவரும் நாட்களில் அடங்காப்பறவைகள் ஆயிரம் சிறகசைத்து என் போன்ற பல வாசகர்களின் மனங்களில் நம்பிக்கை நாதத்தை வளர்க்கும். உங்கள் கலைப்பயணம் நீண்ட பெருவெளியெங்கும் நீடிக்க வாழ்த்துகளுடன்

தியாகரன் சர்மினி
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைமொழியும் தலைப்புக்களும்

தலைப்பில் பொதியும் தத்துவம்
தனித்துவம் காட்டும் சித்திரம்
சுவைஞன் வரையும் வித்தகம்
கலையில் கரையும் சாத்தியம்

அன்பில் அன்னையாகி
அணைப்பில் குழந்தையாகி
ஏழைத்தாயின் சிரிப்பில்
ஏணியாகிறது -

இரண்டாந்தாயின்
எண்ணங்களின் அசைவாகிறது.

பல்லாயிரம் பக்கங்களில்
சிரிக்கும் புத்தகமாகி,
சாத்தான் ஓதும் வேதமாகிறது.

நிறம் மாறும் பச்சை ஓணான்களின்
வித்தையுரைத்து
குர்திஸ் பெண்ணின்
அளவற்ற சுதந்திரம் காட்டி,
இனவிழிப்பின் இலட்சியமுரைக்கிறது.

வக்கிர பூமியில்
சொற்களை பொறுக்கும் பொறுக்கியாகிறது.

விளக்கில் ஒளிரும் ஆண் அன்னையாகி,
புதிர் உதிர்க்கும் பூவாகிறது.

மருத நில வயல்வெளியில்
காற்றின் கந்தர்வ தேவனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்காப்பறவையாகி,
ஆயிரம் சிறகசைத்து,
அழகியல் சார்ந்து அறமுரைக்கிறது.

கதிரையின் கனவு காட்டி,
குரலின் விசையில்
சிறகு முளைத்துப் பறக்கிறது.

புனித நதியில் பயணமாகி
இரவுகளை உடைக்கும்
இனிய வித்தையினை விரிக்கின்றது.

வயதின் திரிபில் தொலைந்து,
படமாகிப் போன அவல வாழ்வு காட்டி
தமிழர் பூமியின் தத்துவமாகிறது

இயற்கை எழிலின்
அழகைக் கண்டு
வியக்கும் விந்தையாகிறது

தீதிலும் நன்று செய்து
நெருப்பை விழுங்கும்
சூரியனாய் நிமிர்கிறது.

நிசப்த பூமியின் ஆற்றலைப்
பாடும் நினைவாகிறது.

புதுமையை மீள நிரப்பும்
புதுக்குழந்தையாகிறது.

விடுதலை எல்லை கடந்து
சுதந்திரப் பகட்டுரைத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச் சுழற்சியைக்
கடக்கும் கருவியாகிறது.

தனி மனித வழிபாட்டின் சித்திரமுறைத்துச்.
சொற்களைத் தேடும்
சிறிய சிசுவாகி
தொலைந்த உறவாகி,
மல்லிகையின் சுற்றமாகி
நினைவுகளைப் பரீட்சிக்கும்
நிழலாகிறது.

இனிமைக்கனியாகி
காணாமல் கரைந்து
யுத்தப்பட்சியாகி
யாதுமாகி நின்று
பொம்மைகளின் பொய்மையுரைக்கிறது.

குறி மீட்டும் நரரின்
மானுட சாபம் வெல்லும்
நாளைய சூரியனாகிறது.

புதிரான புன்னகைத்தீவாகி
ஜோர்ச் பிளாஃட்டின் உணர்வாகி
வரமாகி, கவன இசையாகி,
பிடிக்காததைக் கண்டு பிடித்துவிடுகிறது.

இக்கணத்தைத் தனதாக்கி
வெறுமையை அழகாக்கி
கடலாய்க் கரைந்து,
காத்திருப்பைத் தவமாக்கிறது.

திறமையில் இறகாகி
சக்தியின் பலமாகி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கணத்தின் இலக்கணமுரைத்து
நிரப்பியை நினைக்க வைக்கும்
நிறம் நிறைந்த மைனாவாகிறது.

உறக்கமற்ற இரவுகளில்
தெரியாமல் இனிக்கும் தேனாகிறது.

எழுத்துக்களை சுமையாக்கி
ருத்ர தாண்டவம் ஆடும்
காலத்தின் குழந்தையாகிறது.

நேர முகம் காட்டி
மழையாள் அறியா
மகத்துவமுரைக்கிறது

விளக்கையும் விலங்கையும்
இணைத்துக்
கவனச்சிறகில் கணியும்
கனதியான படைப்பாகிறது

இரவைக் கடந்து
தெளிவில் தெளிந்து
தூங்கா விழியின் வேதமாகி
நிர்மல வழியில்
நித்திய பட்டாம்பூச்சியாகி
மௌனக்கண்ணாடியாகி
ஆழ்மையில் ஆழ்ந்துவிடும்
அற்புதக் கலை ஏறி
அடங்காமல் பறக்கின்றது.

தமிழி
விமர்சகர்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காப் பறவை



அடங்காப்பறவை
கவிதைத் தொகுப்பு

நூலாசிரியர் : துவராசா செல்வக்குமார்

செல்வா எனும் பெயரிலும், இனியவன் எனும் புனைபெயரிலும் எழுதி வருபவர். கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிகின்றார். தமிழ் மொழி மீது பற்றும், தமிழ் கற்பித்தலில் பெரு விருப்பும் ஆழ்ந்த ஈடுபாடும் உடையவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தொடர் முனைப்போடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழியல் துறையில் பட்டமும் பெற்றுள்ளார்.

கவிதை, நாடகம், இலக்கியம், கட்டுரை, சிறுகதை, எனப் பல துறைகளில் பயணம் செய்பவர். இவர் தன்னுடைய பதினேழாவது வயதிலிருந்து கவிதை எழுதி வருபவர். அடங்காப்பறவை எனும் இந்நூல் இவரது ஆரம்ப முயற்சியாகும். இந் நூல் ஈழத்திலக்கியப் பரப்பில் பெரும் பங்களிப்பை நல்கும் என எண்ணுகிறேன். இது போன்ற பல படைப்புக்கள் இவர் மூலம் இலக்கிய உலகிற்கு கிடைக்க வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் மயில்வாகனம் இரகுநாதன்,
தலைவர்
தமிழ்த் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Velan Printers - Kilinochchi

9 786249 906907

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org